தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் அதன் பாரம்பரியமும்

ஏ. என். சட்டநாதன்

சென்னைப் பல்கலைக் கழகம்

1984

தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் அதன் பாரம்பரியமும்

ஏ. என். சட்டநாதன்

பொதுப்பதிப்பாசிரியர்

சி. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர்—தலைவர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்

குறிப்பு

திரு ஏ. என். சட்டநாதன் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெரியார் ஈ. வெ. இராமசாமி அறக் கட்டளையின் சார்பில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரைகளை **The Dravidian Movement and its Legacy in Tamilnadu** என்னும் பெயரில் 1981-ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் நூலாக வெளியிட்டுள்ளது. இவ் ஆங்கில நூலின் தமிழ் வடிவமே இந்நூல்.

ஏ. என். சட்டநாதன்

தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் அதன் பாரம்பரியமும்

தமிழாக்கம்

வ. ஜெயதேவன் ✠ சிவ மாதவன்

சென்னைப் பல்கலைக் கழகம்
1984

© சென்னைப் பல்கலைக் கழகம் 1984

விலை ரூ. 4-50

இரத்தினம் அச்சகம் சென்னை 600 001

பொருளடக்கம்

நூலடைவு			vi
முன்னுரை			vii — viii
சொற்பொழிவு	1	தமிழ் நாட்டில் திராவிட இயக்கமும் ஓர் அரசியல் சக்தியாக அது எழுச்சியுற்றமையும்	1 — 14
சொற்பொழிவு	2	திராவிட இயக்கத்தின் மாறிவரும் அரசியல் படிநிலைகள்	15 — 31
சொற்பொழிவு	3	அரசியலில் சாதியச் செல்வாக்கு	33 — 48

நூலடைவு

1. The Dravidian Movement—Robert L. Hardgrave, Jr. Bombay Popular Prakashan, 1965.

2. Minorities in Madras State (Group Interests in Modern Politics) S. Saraswathi, Impex India, Delhi, 1974.

3. The Modernity of Tradition. (Political Development in India). Lloyd I. Rudolph and Susanne H. Rudolph, University of Chicago Press, Chicago, 1967.

4. Electoral Participation in a South India Context-David J. Elkins Vikas Publishing House Ltd., Delhi, 1975.

5. Caste and Race in India—G. S. Ghurye, Popular Prakashan, Bombay, 1979.

6. Party and Democracy in India-S. N. Sadasivan, Tata Mcgraw Hill Publishing Co. Ltd., Delhi, 1977.

7. Caste in Indian Politics, Edited by Rajan Kothari, Orient Longman Ltd., New Delhi, 1970.

8. Self-Respect Movement in Tamil Nadu—1920—1940 N. K. Mangala Murugesan, Koodal Publishers, Madurai, 1980.

9. Non-Brahmin Movement in Southern India 1873—1949 Kashinath K. Kavlekar, Shivaji University Press, Kolhapur, 1979.

10. திருமந்திரம் — ஜி. வரதராஜன் (பதி.)

11. Report of the Backward Class Commission, Tamil Nadu, 1971.

12. Report of the Backward Class Commission, Government of India (Kaka Khalekar Report) 1955.

13. Politics and Conflict in south India 1916—1929—1969— Irswick, E. A.

14. Vellalas—A Socio-historical perspecture in an essay by Kamala Ganesh in South Indian Studies Vol. II 1979.

முன்னுரை

பெரியார் ஈ. வெ. இராமசாமி அறக்கட்டளையின் சார்பில் தென்னகத்தின் மூத்த இச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவுகளை நிகழ்த்த என்னை அழைத்தமைக்காக இப்பல்கலைக் கழகத்தார்களுக்கு எனது மனமார்ந்த நன்றியறிதலையும் பாராட்டுதலையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பல்கலைக் கழகத்தோடு நெருங்கிய தொடர்பு இல்லாத நான், கல்வியாளர்கள், அறிஞர்கள், கற்றுத்துறை போயவல்லார் ஆகியோருக்கே இத்தகு பெருமைகள் தரப்படும் என்ற எண்ணத்தில் இருந்தேன். இப்பிரிவினருள் எவ்வகையிலும் சாராத நான் இப்படிச் சொல்வது தன்னடக்கத்திற்காகக் கூறப்படும் வெற்றுரையன்று. நான் ஓய்வுபெற்ற பொதுத்துறை ஊழியன், பொருளீட்டத் தேவையற்ற நிலையில் நாட்டு நடப்புகளை ஊன்றிக் கவனிப்பதில் ஆர்வம் கொண்டு என்னுடைய நேரத்தைச் செலவழிப்பவன். நான் ஏறத்தாழ பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பாக இந்தியச் செய்தித் தாள்கள் பலவற்றில் அரசியல், பொருளாதாரம், வரலாறு தொடர்பான கட்டுரைகளை எழுதத்தொடங்கினேன். தமிழ்நாடு பிற்பட்ட வகுப்பினர் குழுவின் தலைமைப்பொறுப்பிற்கு நான் அழைக்கப்பட்ட பொழுது நமது சமூக, அரசியல் முறைகளின் சில கூறுகளை ஆராய்ந்தறியும் வாய்ப்பினையும் பெற்றிருந்தேன். அது முதல், அண்மைக்காலங்களில் நிகழ்ந்த பிற்பட்ட வகுப்பினர் போராட்டம், அதற்கு எதிரான போராட்டம் இவற்றில் தொடர்ந்து ஆழ்ந்த ஈடுபாடு கொண்டுள்ளேன். இச்சொற்பொழிவுக்காக எனக்குத் தரப்பட்ட பொருட்பரப்புகளுள் என் விருப்பத்திற்கேற்பத் தேர்ந்தெடுக்கப்பட்ட இத்தலைப்பு என்னுடைய ஆய்விற்கும் ஆர்வத்திற்கும் பாங்கானதாய் அமைந்திருப்பதால் நான் இப்பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன்.

மேலும் இதில் எனக்குத் தனிப்பட்ட ஈடுபாடும் உண்டு. பெரியார் மறைவிற்கு முற்பட்ட பத்தாண்டுகளாக அவரை நான் நன்கறிவேன். 1934-35 வாக்கில் பெரியார் தமது புகழ்மிக்க இரண்டு தொண்டர்களுடன் பம்பாயில் தாதர் பகுதியில் என் நண்பர் வீட்டிற்கு வந்திருந்த போது என் முதல் தொடர்பு ஏற்பட்டது. அத்தொண்டர்களும் இன்று நம்மிடையே இல்லை. கடவுள் மறுப்பாளராகிய பெரியாரின் துறவி போன்ற தோற்றமும், அவரோடு வந்திருந்த தொண்டர் இருவரின் சீடர் போன்ற நடத்தையும் பக்கத்திலிருந்த இந்துப் பெண்மணிகளின் கவனத்தைக் கவர்ந்தன. அவர்கள் பெரியாரைத் தெற்கிலிருந்து வந்திருக்கிற 'சாமியார்' என்று எண்ணிக்கொண்டனர். அப்பெண்கள் என் நண்பரிடம் பேசி பெரியாரைத் தரிசிக்கும் வாய்ப்பைக் கேட்டனர். அடுத்தநாள் சுவாமிகள் மௌனம் மேற்கொள்வார் என்ற நிபந்தனையுடன் தரிசனம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்தப் பெண்கள் மலர்கள், பழங்கள், இனிப்புகள் ஆகியவற்றைத் தட்டுகளில் ஏந்தி வந்து

அவற்றை அவரைச் சுற்றி வைத்துவிட்டுப் பக்கத்தில் அமைதியாக அமர்ந்தனர். அந்தப் பெரியவர் அவர்களை மதிக்கும் வகையில் தலையைப் பன்முறை அசைத்தும், அவர்களுக்கு ஆசி அருளுதல் போன்றும் கையை உயர்த்தினார். அப்பெண்கள் முழு மகிழ்வோடும் மனநிறைவோடும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர். அவரும் மறுநாள் பம்பாயை விட்டுப் புறப்பட்டார்.

1967 அல்லது 1968 இல் இந்நிகழ்ச்சியைக் கட்டுரையாக ஓர் செய்தித் தாளில் எழுதினேன். இதன் உண்மை பற்றிப் பெரியாரிடம் கேட்கப் பட்ட போது பம்பாயில் நடந்த அந்த நிகழ்ச்சி உண்மையே என்று கூறிய பின்னர் அவர் எனக்குச் சொல்லி அனுப்பினார். அதற்குப் பிறகு நான் பெரியாரை அடிக்கடிச் சந்திப்பது வழக்கம். அவரிடம் நிறைந்த நகைச்சுவை உணர்வும், குழந்தை போன்று எதனையும் பாராட்டும் பண்பும் நிறைந்திருந்தன. நாட்டில் ஆங்காங்கே நிறுவப் பட்டிருக்கிற சிலைகள் மீது தேங்காய்கள் உடைக்கப்படும் என்றும், கடவுள் தன்மையற்ற சமயவாதிகளுக்குப் பூசைகள் நிகழ்த்தப்படும் என்றும் கூறி அவரைக் கேலி செய்வது வழக்கம். மேலும், அவருடைய தலையிலேயே பார்ப்பனப் பெண்டிர் தேங்காய் உடைக்கக் கூடும் என்று கூறுவதைக் கேட்டு அவர்பெரிதும் மகிழ்ந்து வாய்விட்டுச் சிரிப்பார். இவையெல்லாம் நடந்து முடிந்து விட்டன.

மிகக் குறைந்த காலத்திலேயே சாமானிய மக்களுக்கு இவ்வளவு நிறைந்த தொண்டாற்றியுள்ள அந்தப் பெருந்தகைக்கு என்னுடைய அஞ்சலியை மீண்டும் ஒரு முறை செலுத்துவதற்கு வாய்ப்பு அளித்த இப்பல்கலைக் கழகத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய தொண்டு என்றும் இறவாத் தன்மை உடையது.

சொற்பொழிவு 1

தமிழ்நாட்டில் திராவிட இயக்கமும் ஓர் அரசியல் சக்தியாக அது எழுச்சியுற்றமையும்

1. இயக்கத்தின் தொடக்கம்: திராவிடத்திலிருந்தா?

தென்னிந்திய வரலாற்றில் இந்த நூற்றாண்டின் மிகச்சிறப்பான நிகழ்ச்சி, திராவிட இயக்கம் என்று கூறப்படுகின்ற பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தின் எழுச்சியும் அதன் வளர்ச்சியுமாகும். இந்திய வரலாற்றில் முதன் முறையாக மதமோ, இனமோ அன்றிச் சாதியே பெருஞ்சக்தியாக அரசியலுள் நுழைந்தது. திராவிட இயக்கம் இந்திய வரலாற்றில் ஓர் அண்மைக்கால அத்தியாயமெனினும் இவ்வியக்கத்தின் தொடக்கம் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது இப்போது இது ஒரு வரலாற்று ஆய்வுப் பொருளாகவே ஆகிவிட்டது. இந்த இயக்கம் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் பம்பாய் மாநிலத்தில்-குறிப்பாக-மராட்டியப் பகுதியில் தோன்றிப் பின்பு அது தெற்கு நோக்கிப் பரவியது என்பது பரவலாகக் கூறப்படும் கருத்து. அந் நாளில் விந்திய மலையின் தெற்குப் பகுதியானது பம்பாய் மாநிலம் சென்னை மாநிலம் என்ற இரண்டு பேராட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது என்பதையும், இவ்விரு பகுதிகளுக்கிடையில் சில பெரிய, சிறிய குறுநில மன்னர்களுடைய ஆட்சிப் பரப்புகள் இருந்தன என்ப தையும் கருத்திற்கொள்வது இன்றியமையாதது. ஆயின் அடிப்படை யான சமூக, சமய, இனச்சார்பான இயக்கம் தோன்றிய நாளை வரை யறுத்துக் கூற நம்மால் இயலாது. காலவரையறை என்பது சிறப்புமிக்க மனிதன், வரலாற்று நிகழ்ச்சி, இயற்கை நிகழ்ச்சி போன்றவற்றுடன் தொடர்புடையவற்றிற்கே உரியது.

பார்ப்பனர்களுக்கு எதிரான, பார்ப்பனர் அல்லாத பிற சாதியினரின் இயக்கம் என இவ்வியக்கம் கருதப்படுமானல், இது ஆரியர் குடியேறிய நாள் முதலே ஏதாவது ஒரு வடிவில் இருந்திருக்கலாம்; பௌத்தமும், சமணமும் கூட பார்ப்பனர் எதிர்ப்பு இயக்கங்களாகக் கூறப்படலாம். எனினும் இவையெல்லாம் நிச்சயம் எவ்வகையிலும் திராவிட இயக் கங்களே அல்ல. இவ்வியக்கங்கள் எல்லாம் பெரும்பாலும் சமயச் சார்பானவை; சமூகச் சீர்திருத்தங்களில் ஈடுபாடு கொண்டவை; வருணம் அல்லது சாதியின் அடிப்படையில் பார்ப்பனருக்கு எதிராக இவ்வியக் கங்கள் செலுத்தப்படவில்லை; அன்றியும், இவை பார்ப்பனர்பால் வெறுப்புணர்ச்சியையும் ஊட்டவில்லை. ஆரியரல்லாத ஆரியர் வழி வந்த க்ஷத்திரியர், வைசியர் அற்ற திராவிடரின் போராட்டம் அல்லது இயக்கத்தையே திராவிட இயக்கம் எனலாம். இப்பொருளில் இப் போதைய திராவிட இயக்கம் அமையவில்லை. எனினும் உறுதியாகப் பார்ப்பனர் அல்லாதார் இயக்கமாகவே அன்றும் இன்றும் இருந்து வருகிறது.

2. வரலாற்றுக் காலங்களில் சமூக, சமயச் சீர்திருத்தங்கள்

ஆரியர்கள் இந்தியாவில் குடியேறிய காலத்திலிருந்து ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் இஸ்லாமியர் படைநடத்தி ஆட்சி நிறுவி ஆண்ட காலம் வரை பார்ப்பனர்கள் சில சமயங்களில் ஆட்சியாள ராகவும், பல சமயங்களில் அரசுக்குப் பின்பலமாகவும் இருந்தனர். இந்தக் காலப்பரப்பு முழுதிலும் பார்ப்பனர்களின் அரசியல் செல்வாக்கு, ஆட்சித்துறையில் ஆதிக்கம் முதலியவற்றை எதிர்த்து எவ்வகைப் போராட்டமும் நிகழவில்லை. சமூகச்சீர்திருத்தம், பார்ப்பனியச் சடங்கு முறைகளில் நெகிழ்ச்சி அல்லது எளிமை ஆகியவை கருதி அவ்வப்போது சில இயக்கங்கள் எழுந்தன. சமூக அளவில் பார்ப்பனர் மதச் சடங்கு களால் பெற்றிருந்த உயர்நிலையை எதிர்த்து நேரடித்தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை. க்ஷத்திரியரின் எழுச்சி அடக்கப்பெற்றதைப் பரசு ராமன் கதை வாயிலாகப் புராணங்கள் உறுதி செய்கின்றன. நினைவுக் கெட்டாத காலம் முதல், காப்பியங்களும் புராணங்களும், வினை, மறுபிறப்பு போன்ற கோட்பாடுகளைப் பரப்புவதன் வாயிலாக அவை சமூகத்தின் பெரும் பகுதியினரை அவர்களது சமூக, சமய, பொருளா தாரத் தாழ்வு நிலையினை ஒப்புக் கொள்ளச் செய்தன.

3. ஆரியர்கள் குடியேற்றம் ஒட்டு மொத்தமானதன்று

மேற்குறிப்பிட்ட ஆரியக் கொள்கைகளைக் கண்டனம் செய்யுமள விற்கு முறையான பகுத்தறிவு முயற்சி எதுவும் .மேற்கொள்ளப்பட வில்லை. பொதுவாகத் தென்னிந்தியாவையும், .குறிப்பாகத் தமிழ் நாட்டையும் பொறுத்தமட்டில் பார்ப்பனர் தவிர்ந்த பிற சாதியினர் அனைவரும் திராவிடர்கள் என்ற கருத்தில் ஓரளவு உண்மை இருக்கக் கூடும். ந. சுப்பிரமணியன் போன்ற இக்கால வரலாற்றாசிரியர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு படிப்போரை மனங்கொளச் செய்தல் போன்று, வடபுலத்து ஆரியப் பார்ப்பனர்கள் தங்கள் முழுமையான சாதிய அமைப்புடன் ஒட்டுமொத்தமாகத் தென்னிந்தியாவில் குடியேற வில்லை. மாறாக, அவர்கள் வருணாசிரம அமைப்பை அல்லது சாதியப் பண்பாட்டினை மறைமுகமாக இங்கே அறிமுகப்படுத்தினர்.

ஆரியர்களின் சாதியமைப்புக்கொள்கைப்படி, தென்னகப் பழங்குடி மக்களுக்கும் தொழில்வழிக் குழுக்களுக்கும் சமூக ஏணியில், மதச்சடங்கு களின் அடிப்படையில் வருணம் அளிக்கப்பட்டது. அரச மரபினருக்குச் 'க்ஷத்திரியர்' என்ற அந்தஸ்தும் மரபும் அளிக்கப்பட்டன; வாணிபம் செய்யும் சில சாதியினர் 'வைசியர்' என்ற பட்டம் பெற்றனர்; பிற தொழிற் பிரிவினர் அனைவரும் அவர்களுடைய இடவேறுபாட்டிற் கேற்பச் 'சூத்திரர்' என்னும் பெரும்பான்மை பிரிவினுள் சேர்க்கப் பட்டனர். இந்தப் பண்பாட்டுத் தழுவலை எதிர்த்து, முற்காலத்தில் வாழ்ந்துவந்த தமிழக மக்கள் போராட்டமோ புரட்சியோ மேற்கொண்ட தற்கு எச்சான்றும் இல்லை. ஆரியரின் பண்பாட்டுக்கொள்கையானது

விருப்பமில்லா நிலையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான குறிப்புகள் ஏதும் சங்க இலக்கியத்திலோ, சங்கம் மருவிய இலக்கியத்திலோ இல்லை. இப் பகுதித் தெய்வங்களும், சடங்குகளும் சமஸ்கிருத மயமாக்கப்பட்டதோடு, ஆரிய மத, புராணக் கருத்துகளும் இம்மண்ணில் பரவின.

4. பழந்தமிழ் இலக்கியக் குறிப்புகள்

இக்கால ஆராய்ச்சியாளர் ஒருவர், கி. பி. 5 அல்லது 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனப் பொதுவாகக் கருதப்படும் திருமூலரின் திருமந்திரத்தில் பார்ப்பனிய எதிர்ப்புக்கருத்தைக் கண்டறிய முயற்சி செய்துள்ளார். திருமந்திரத்தில் இரண்டாம் தந்திரத்தில் உள்ள சில பாடல்களில் காணப்படும் பூணூல், குடுமி பற்றிய வருணனை ஏளனம் நிறைந்தது எனவும், திருமூலர் இதன் வாயிலாகப் பார்ப்பனரை ஏளனம் செய்கிறார் எனவும், அவ் எள்ளல் பார்ப்பன எதிர்ப்பை உருவாக்குகிறது எனவும் அவ்வாய்வாளர் சுட்டியுள்ளார். ஆனால் திருமூலர் அவ்விடத்தில் பூணூல், குடுமி இவற்றுக்குத் தந்திர சாத்திரக் குறியீட்டைக் கொண்டுள்ளார். இதற்கு முந்திய பாடல் ஒன்றில் திருமூலர், பார்ப்பனர்கள் 'காயத்ரி' மந்திரத்தை முறைப்படி ஓதி சிவனின் அருளைப் பெற்றனர் என்றும் மாயையை வெற்றி கொண்டனர் என்றும் கூறி அவர்களைப் புகழ்கின்றார். இவ்வாறு அவர் அவர்களைப் புகழ்ந்து கூறிவிட்டுப் பிறகு அவர்களுக்கெதிராக வெறுப்புணர்வைப் பரப்புகிறார் எனல் ஏற்கத் தக்கதன்று. தந்திர சாத்திரக் கலையில் துறைபோய சித்தர்களுள் காலத்தால் முற்பட்டவர் திருமூலர். சமயத்தின் புறவடிவங்களுக்கு உடன்படுவது தேவையானது என்று சித்தர்கள் கருதவில்லை; சித்தர்களுள் அனைவரும் உருவ வழிபாட்டையோ அர்ச்சகர்களது நியமனத்தையோ புறக்கணிக்கவில்லை; அவர்கள் பார்ப்பனருக்கோ ஆரியருக்கோ எதிரானவர்கள் அல்லர்.

பார்ப்பனர்கள் தொடர்ந்து தங்களுடைய சிறப்புரிமைகளைத் துய்த்துவந்தனர். நாயன்மார்கள் காலத்தில் நிறுவப்பட்ட சைவமடங்களின் ஆளுகைக்குட்பட்ட ஆலயங்களிலும் கூட அவர்கள் இப்போது இருந்தலைப் போன்று தலைமை அர்ச்சகர்களாகப் பணிபுரிந்தனர். திராவிடம் அல்லது பார்ப்பன எதிர்ப்புக்குப் பழைமைச் சிறப்பளித்து, அதனைத் திருமூலருடனும், கி. பி 7, 8 நூற்றாண்டுகளில் வளர்ச்சியுற்ற சைவ வழக்குடனும் தொடர்புபடுத்திப் பேசுவது குறுகிய தற்பற்று வெறியின் உச்சநிலையாகும்.

சிறந்த சமூகவியல் அறிஞரான டாக்டர் குர்யே மேலே குறிப்பிட்ட ஆராய்ச்சியாளரை விஞ்சும் வகையில் பார்ப்பன எதிர்ப்பானது இன்னும் தொன்மையானது எனத் தமது அண்மைப்பதிப்பாகிய 'இந்தியாவில் சாதியும் இனமும்' என்ற நூலில் கூறுவது மிகவும் வியப்பானது; சங்க காலத்தில் சமஸ்கிருதச் சொற்கள் அல்லது சமஸ்கிருத மொழி பெயர்ப்பு இல்லாமை, தமிழ் மொழி, இலக்கியம் சமஸ்கிருதச் செல்வாக்கில்லாது தனித்து வளர்ச்சியுற்றமை ஆகியவை ஆரிய எதிர்ப்பு,

பார்ப்பன எதிர்ப்புக்கு எடுத்துக் காட்டுகளாக அவரால் குறிக்கப் படுகின்றன. இவ்வாறே ஆய்வுணர்ச்சியின்றி அவர், ஆழ்வார், நாயன் மார்களுள் பலவேளாளர்களும் மற்றும் பறையர்களும் இருந்தனர் என்று குறிக்கப்படுதலையும், பெரியபுராணம் வேளாளராகிய சேக்கிழாரால் இயற்றப்பட்டதையும் காட்டி இவையெல்லாம் பார்ப்பன எதிர்ப்புக்குரிய எடுத்துக்காட்டுகள் ஆகும் என்று தவறாகத் தெரிவிக்கிறார். கற்று வல்ல இச்சமூகவியல் அறிஞர், இந்நூற்றாண்டின் முப்பது, நாற்பது களில் தோன்றிய திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இவற்றின் துண்டு வெளியீட்டாளர்களின் தற்பற்று வெறியை வருணிக் கையில் அவ்வெளியீடுகளில் காணப்பெறும் பார்ப்பன எதிர்ப்பானது முற்காலத்தில் விளங்கிய பார்ப்பன எதிர்ப்பின் மறுபதிப்பே எனத் தவறாகத் தெரிவிக்கிறார்.

தமிழ்நாட்டை ஆண்ட பல்லவர், சோழர், பாண்டியர் எவரும் ஒரு போதும் பார்ப்பனர் எதிர்ப்பைப் புலப்படுத்தவில்லை. உண்மையில் பார்ப்பனர்களை வடநாட்டிலிருந்து அவ்வப்போது கூட்டங் கூட்ட மாகத் தருவித்ததற்கும், தாங்கள் கட்டிய கோவில்களைச் சுற்றி அவர் களைக் குடிவைத்ததற்கும் அம்மன்னர்கள் தாம் பொறுப்பாளிகள் ஆவர்.

5. பார்ப்பன எதிர்ப்பு—ஒரு நவீன அற்புதம்

திராவிட இயக்கம் என்னும் பெயரில் அமைந்த பார்ப்பன எதிர்ப்பு அல்லது பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் என்பது ஆங்கிலேயர் ஆட்சியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தலையெடுத்த ஒரு புது அற்புதமாகும். ஆங்கிலேயர்கள் தமது ஆட்சியை ஒன்று திரட்ட இந்து சமயத்துள் உயர்சாதியினராகவும், நெடுங்காலமாகக் கல்வி பயின்றவர்களாகவும், ஆட்சித்திறத்தில் காலங்காலமாக மதிக்கப்பட்டு வந்தவர்களுமாகிய பார்பனர்களையே நம்ப வேண்டியிருந்தது. மேலும் இவர்கள் சமய வழிபாட்டுப் பணிகளில் வகித்த உயர்ந்த இடத்தாலும், இதன் காரணமாக இவர்கள் சாதாரண மக்களின் பணிவுக்கும் மதிப்புக்கும் உரியவர்களாக விளங்கியமையாலும் ஆங்கிலேயர்கள் பார்ப்பனர்களையே நம்ப வேண்டியிருந்தது. சிறு சிறு பார்ப்பன அலுவலர்கள் கூட அவர்கள் பார்ப்பனர்கள் என்பதாலேயே மதிக்கப் பட்டனர்; மரியாதை செலுத்தப் பட்டனர்; பணிவு காட்டப்பட்டனர்.

வாலன்டைன் சிறால் (*Valentine Chirol*) 1910 இல் எழுதிய தமது 'இந்தியர் அமைதியின்மை' (*Indian Unrest*) நூலில் எர்ஸ்கின் பிரபுவின் வடிகட்டுக்கொள்கைக்கு எடுத்துக்காட்டாகப் பார்ப்பனர் களின் நிலையை அரசு ஊழியர் நிலையோடு ஒப்பிட்டுப் பின்வருமாறு கூறுகிறார்: "இந்தியாவில், ஆங்கிலேயரின் கல்வி சமயத்தோடு பின்னிப் பிணைந்த ஒன்றாய் இருந்ததால், இந்துக்களின் உயர்கல்வி பார்ப்பனர்களின் கையில் இருந்ததோடு அது அவர்களுக்கே உரிய தாகவும் விளங்கியது." இந்தக் கல்வி முறை இரு தென்னக மாநிலங்

களிலும் குறுநில ஆட்சிப் பரப்புகளிலும் முழுமையாகவும் பரவலாகவும் இருந்தது. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளில் 80 முதல் 90 விழுக்காடு பார்ப்பனர்களால் கைக்கொள்ளப்பட்டன. அரசுப் பணிகள் மட்டுமன்றி பிறதுறைப் பணி களிலும் அவர்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இக்காலப்பரப்பில் அரசு ஊழியர்கள், வழக்குரைஞர்கள் போன்ற பதவிகளை வகித்த பார்ப்பனரின் எண்ணிக்கை அடிக்கடி பல அறிக்கைகளிலும், வெளியீடு களிலும் வெளிவந்திருப்பதால் மீண்டும் அவற்றை இங்குப் புள்ளி விவரங்களுடன் தரத் தேவையில்லை.

6. பார்ப்பனர் அல்லாத உயர்சாதியினரின் எதிர்ப்பு இயக்கம்

திராவிட இயக்கம் என்று தற்போது அழைக்கப்படுகிற பார்ப்பனர் அல்லாத இயக்கம் ஒரு புது நெறியாகும். இது பற்றிப் பின்னர் முழுமையாக விளக்கப்படும். இந்த இயக்கம் மகாராட்டிரம், சென்னை மாநிலங்களில் ஏறத்தாழ ஒரே காலத்தில், ஒத்த காரணங்களுக்காக எழுந்த ஒரு புது நெறியாகும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மராட்டிய, சென்னை மாநிலத் தலைவர்களிடையே பின்னர் தொடர்பு இருந்தபோதிலும் இவ்வியக்கம் மகாராட்டிரத்தி லிருந்து தமிழகத்திற்குத் தருவிக்கப்பட்டது என்பதற்கான சான்று எதுவும் இல்லை. இது ஆங்கிலேயர் ஆட்சிக்கு ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் தோன்றியது. நாளடைவில் பார்ப்பனர் களுக்கு எதிரான வெறுப்புணர்ச்சியை வளர்த்துக் கொண்டாலும் தொடக்கத்தில் இது பார்ப்பன எதிர்ப்பியக்கமன்று. இந்த இயக்கம் முகமதியர்களையும், கிறித்தவர்களையும் சேர்த்துக்கொண்ட போதிலும் தாழ்த்தப்பட்டோர் என அப்போது குறிப்பிடப்பெற்ற வகுப்பினரை இதில் ஈடுபடுத்தாதது விந்தையானது. இது அடிப்படையில் பார்ப்பனர் அல்லாத உயர் சாதியினரின் இயக்கமாக இருந்தது. இவ்வுயர் சாதி யினர் சமயச் சடங்குகளில் இல்லாவிட்டாலும், சமுதாய, அரசியல் மற்றும் அரசுப் பணிகளிலாவது தமக்குரிய முக்கியமான இடத்தைப் பெறவேண்டும் என்பதில் எப்போதும் பேரார்வம் காட்டி வந்தனர்.

வரலாற்று ரீதியில் பல்லவர், சோழர், பாண்டியர் மற்றும் நாயக்கர் களின் ஆட்சியின்போது கூட உயர் அலுவல்கள், குறிப்பாக நீதி மன்றம், நில ஆட்சிமுறை முதலான அலுவல்கள் யாவும் வேளாளர், முதலியார் என்னும் இரு சாதியினரால் நடத்தப்பெற்றன. முற்காலச் சோழர்காலத்தில் வேளிர்கள் என அழைக்கப்பட்டவர்கள் பெரிய நிலவுடைமையாளர்களாக மட்டுமல்லாமல் நிலப்பிரபுக்களாகவும் விளங் கினர்; படைபலம் கொண்டவர்களாகவும் அதனைப் பன்மடங்கு பெருக்குபவர்களாகவும் விளங்கினர். இவர்கள் தம் பெண்களை அரச குடும்பத்தினருக்கு மணம் முடித்தனர். வேளிர்கள் முற்காலத்தில் பெற்ற சிறப்பு நிலைகள் யாவும் பிற்காலப் பாண்டியர், நாயக்கர் ஆட்சிக்காலங் களில் தளவாய்களாகத் தொடர்ந்து பேணப்பட்டன. தெலுங்குச்

சோழர்களையும் நாயக்க அரசர்களையும் தொடர்ந்து நாயுடு, ரெட்டியார் என்னும் இரு சாதியினரும் பெரும் நிலக்கிழார்களாகவும், உயர்நிலை களுக்கு உரிமை கொண்டாடுபவர்களாகவும் உயர்வு பெற்றனர். இதன் பயனாக வேளாளர், நாயுடு, ரெட்டியார் என்னும் இம்மூவகையினரும் பார்ப்பனர் அல்லாத மக்களிடத்து ஆதிக்கம் செலுத்தினர். ஆங்கிலே யரின் ஆட்சிக்காலத்தில் தான் இவர்கள் தங்களின் ஆதிக்க நிலையை இழந்தனர். 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர்கள் ஆரியர் அல்லாதவர் அல்லது பார்ப்பனர் அல்லாதாரின் தலைவர்களாவதன் மூலம் தமது பழைய வரலாற்றுப் புகழ்மிக்க தலைமையிடத்தை மீண்டும் பெறவிரும்பினர். இத்தகு சூழ்நிலைகளில் தமிழகத்தில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் பம்பாய் மாநிலத்தைச் சார்ந்த மராட்டியப் பகுதியி னின்று கிளைத்தெழுந்ததெனக் கூறுவது பொருத்தமுடையதன்று. இது போன்ற இயக்கங்கள் மராட்டியத்திலும், தமிழகத்திலும் ஒரே காலகட்டத்தில், ஒத்த காரணங்களின் அடியாக எழுந்தன என்ற ஒன்றை மட்டும் சொல்லலாம்.

7. இவ்வியக்கம் தென்னகத்தில் தோன்றியது ஏன்?

தென்னாட்டில் திராவிட இயக்கம் தோற்றுவிக்கப்பட்டதன் காரணத்தையும், அது வடநாட்டில் தோன்றாததையும் லாயிட் ரூடால்ஃப் (*Loyd Rudolph*), சுசேன் ரூடால்ஃப் (*Susanne Rudolph*) என்ற இரு ஆசிரியர்களும் தங்களுடைய பல்வேறு ஆய்வுகளின் மூல மாகப் பின்வரும் காரணத்தை மட்டுமே கூறுகின்றனர். பார்ப்பனர்கள் தாங்கள் தாம் இரு பிறப்புடைய உண்மையான ஆரியர்கள் என்ற கருத்தைத் தென்னாட்டிலே வெளிப்படையாகக் கூறிவந்தார்கள். வடநாட்டிலோ பல பார்ப்பனர் அல்லாத க்ஷத்திரிய, வைசியர் போன்ற வர்களும் தங்களை இரு பிறப்புடையவர்கள் என்று கூறிக்கொண்டனர். அத்துடன் வடநாட்டில் மொகலாயரின் ஆட்சிக் காலத்தில் காயஸ்தர்கள் என்ற புதிய சாதியினரும் உருவாகி முன்னுக்கு வந்தனர். இந்தப் புதிய சாதியினர் அரசுப்பணிகளில் தமக்குரிய பங்கினைப் பெறவும் அறிவுத்துறைகளில் சிறந்த இடத்தைப்பெறவும் பார்ப்பனர்களோடு போட்டியிட்டு வெற்றியும் கண்டனர். முகமதிய மன்னர்களின் வருகைக்குப் பிறகு ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வந்தபின்னும் வட நாட்டுப் பார்ப்பனர்களால் எந்த அதிகாரமிடும் பணிகளையும் பெற முடியவில்லை. பார்ப்பனர்களுடைய பணியை ஏற்கின்ற அளவுக்குக் கோயில்கள், கல்விக் கூடங்கள் அதிகமாக இல்லை. வடநாட்டுப் பார்ப்பனர்கள்-அவர்கள் ஆண், பெண் யாராயிருப்பினும்-உடை, பேச்சு முறை, நடத்தை ஆகியவற்றில் மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்த முடியாதவர்களாய் இருந்தனர். ஆனால் தமிழ் நாட்டில் அவர்கள் தம்மை முற்றிலும் வேறுபட்டவர்களாகக் காட்டிக் கொண்டனர். இந்த உண்மை சாதாரணமானதாக இருந்தாலும் இதுவும் தமிழ் நாட்டில் திராவிட இயக்கம் தோன்ற ஒரு காரணமாக இருந்தது எனலாம்.

பார்ப்பனர்களுடைய அக்கிரகார வாழ்க்கை முறையும், எண்ணிறந்த கோயில்களும் அவர்கள் அரசுப்பணிகளிலும், பிற தொழில்களிலும் பெரும் எண்ணிக்கையில் பங்கேற்பதற்கேற்றத் தெளிவான நிலையை உருவாக்கித் தந்தன.

8. பார்ப்பனர் அல்லாத உயர் வகுப்பினரின் குறிக்கோள்கள்

பார்ப்பனர்கள் அரசுப்பணிகளில் பெற்றிருந்த ஆதிக்க நிலை, அரசியல் செல்வாக்கு, அரசியலில் பெற்றிருந்த இடம் ஆகியவற்றிலிருந்து விரைவாக ~~அவர்களை மாற்றி அவ்விடங்களில்~~ தாங்கள் அமர வேண்டும் என்பதே தொடக்கத்தில் பார்ப்பனர் அல்லாத உயர்சாதித் தலைமைப் பொறுப்பின் நாட்டமாக இருந்தது. கல்வி, பொருளாதார வலிமை, அரசியல் செல்வாக்கு இல்லாத நிலையில் ஆங்கிலேய ஆட்சியின் நேரடி ஆதரவைத் தாம் பெற்றாலன்றி இந்த மாற்றத்தைச் செய்வது எளிதன்று என்பதையும் அத்தலைவர்கள் உணர்ந்திருந்தனர். விரைந்து வலுப்பெற்று வந்த இந்தப் புதிய பார்ப்பனர் அல்லாத உயர் சாதிப் பிரமுகர்கள் ஆங்கிலேயே ஆட்சி நீக்கப்பட்டுவிட்டால் காங்கிரஸ் கட்சியின் பார்ப்பனத் தலைவர்கள் சாதாரணமக்களின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவர் என்று கருதியமையால், தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் மீது தங்களுக்கிருந்த அவநம்பிக்கையை வெளிப்படுத்தினர். எனவே, உயர்சாதியினரின் புதிய தலைமை, தேசியவாதிகளின் இயக்கத்திற்கு வெளிப்படையான எதிர்ப்பாக விளங்கியதோடு ஆங்கிலேய ஆட்சிக்குப் பக்கத்துணையாக நின்றது.

9. பார்ப்பனர் அல்லாதாரின் கொள்கை விளக்கமும் தலைமையும்

1916-ஆம் ஆண்டின் பார்ப்பனர் அல்லாதார் கொள்கை விளக்க அறிக்கையில் அவர்கள் தங்கள் அச்சவுணர்வுகளை வெளிப்படுத்தினர். கொள்கை விளக்க அறிக்கையை வெளியிட்ட தென்னிந்தியர் நல உரிமைச் சங்கமும், அக்கொள்கை விளக்க அறிக்கையும் ஆங்கிலேயரிடமிருந்து ஆட்சிமாற்றம் பார்ப்பன எசமானர்களின் கைகளுக்குச் சென்றுவிடும் என்ற காரணத்தால் அதனை உறுதியாக எதிர்த்தன. இதையடுத்து, 1917 ஆகஸ்டில் தென்னிந்திய விடுதலைக் கழகம் என்ற அமைப்பு அரசியல் அமைப்பாகச் செயல்படும் முகத்தான் டாக்டர் டி. எம். நாயர், பி. தியாகராசச் செட்டியார், டாக்டர் சி. நடேச முதலியார் ஆகியோரின் தலைமையில் தோற்றுவிக்கப்பட்டது. இத்தலைவர்களைப் பற்றித் தவறாகக் கூறுவது சில ஆண்டுகளுக்கு முன் வரை பாவமாகக் கருதப்பட்ட போதிலும் என்னுடைய சில கருத்துகளைக் கூற விழைகின்றேன்.

பார்ப்பனியம் ஆழமாக வேரூன்றிக்கிடந்த கேரளாவில் அதற்கு எதிராக எந்த இயக்கமும் எழவில்லை. இந்நிலையில் கேரளாவைச் சேர்ந்த நாயர் சென்னை மாநிலத்தில் கேரளாவின் ஒரு பகுதி உட்பட்டிராவிட்டால் தமிழ் நாட்டு அரசியலில் ஈடுபட்டிருக்கமாட்டார். தியாகராசச் செட்டியார் தெலுங்கு பேசும் வணிகர்; மற்றொருவர் முதலியார். இந்தக் கழகத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரதிநிதியாக நாயர் விளங்கினார். இதற்குச் சில தனிப்பட்ட காரணங்கள் உண்டு. இந்தக் கழகம் சமூகத்தின் உயர்மட்டத்தில் உள்ள செல்வந்தர்களை ஒன்று திரட்டுகின்ற குழுவாகவே விளங்கிற்று. இக்குழுவினர் சமூகத்திலுள்ள எளிய மக்களின் பிரதிநிதிகளாக இல்லை. அம்மக்களின் இன்பதுன்பங்களைத் தெரிந்தவர்களாகவும் இல்லை, பொதுமக்களுக்கு, நன்மை செய்யும் நோக்கிலான புதிய சமுதாயத்தை அமைத்தல், பொருளாதார மேம்பாடு—இவைபற்றித் தீவிரமான முயற்சியை அவர்கள் மேற்கொள்ளவில்லை. இவ்வியக்கம் சமூகத்தின் எளிய மக்களை அணுகாமல் பெரும்பாலும் நகரமாந்தரைச் சார்ந்ததாகவே இருந்தது என்பது உண்மை. தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றிய எண்ணத்தை இக் குழுவினர் கொண்டிருந்தனர் என்பதற்குச் சான்று எதுவும் இல்லை. இவர்கள் பெரும் நிலக்கிழார்களாதலால் எளிய மக்களைச் சிறிது கூடப் பொருட்படுத்தவில்லை. பார்ப்பனர் அல்லாத உயர்சாதியைச் சேர்ந்த முதல் தலைமுறையினரில் பட்டம் பெற்றவர்கள் அல்லது அறிவுத் துறையினரை இக்கழகம் உறுப்பினர்களாகக்கொண்டிருந்தது. உள்ளாட்சியின் அளவுகோலாக இருந்த மாவட்டக்கழகம் என்னும் அமைப்பில் பார்ப்பனர்களின் எண்ணிக்கை பெருகியது குறித்தும், டாக்டர் அன்னிபெசன்ட் தலைமையில் சென்னையில் செல்வாக்குப் பெற்று விளங்கிய தன்னாட்சி இயக்கத்தில் பார்ப்பனர்களின் செல்வாக்கு பெருகிவருதலைக்கண்டும் பார்ப்பனர் அல்லாதாரின் தலைவர்கள் பெரிதும் கவலை கொண்டனர்.

10. பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் பற்றிய ஆங்கிலேயரின் மனப்பாங்கு—ஒரு மதிப்புரை

இது தொடர்பாக, பார்ப்பனர்கள் அறிவுத் துறைகளிலும் அரசுப் பணியிலும் பெற்றிருந்த ஆதிக்கம் குறித்து அந்நாளில் ஆங்கிலேய அரசு என்ன நினைத்தது என்பதை நோக்குவது பயனுடையதாகும். சென்னை மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 4 விழுக்காடு உள்ள பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக எழுந்த உணர்வுப் போக்கை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் முன்கூட்டியே அறிந்திருந்தனர். மேலும் சமூக நீதி காரணமாக இவர்களது ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துகிற அறிவையும் பெற்றிருந்தனர். மிண்டோ மார்லி சீர்திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சிறியசட்டமன்றத்தில் கூடப்பார்ப்பனர்களே ஆதிக்கமுடையோராய் இருந்தனர். 1907-ஆம் ஆண்டிலேயே இந்திய அரசின் உள்துறையானது சென்னை சட்டமேலவையில் இந்தியர்கள் பங்கேற்க வேண்டும் என்ற கருத்துத்தூண்டுதலையடுத்து ஒரு திட்டத்தைத்

தயாரித்தது. இதன்படி அரசுத்துறை சாராத 17 தேர்தல் தொகுதிகள் இருத்தல் வேண்டும். சாதி, தொழிற்குழுக்களின் வாக்காளரால் தேர்ந் தெடுக்கப்படவேண்டிய இத்தொகுதிகளில் கிறித்தவர், முகமதியர் உள்ளிட்ட பார்ப்பனர் அல்லாதார்க்குக் கணிசமான அளவில் பிரதிநிதித் துவம் கிடைத்தது. சட்டமன்றங்களில் கொண்டுவரப்பட்ட இந்த வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் இந்தியா முழுவதும் கடுமையான கண்டனத்திற்கு ஆளாயிற்று. இது சென்னைப் பத்திரிகைத் துறையினரால் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிரானது என்று கூடச் சித்திரிக்கப்பட்டது. உண்மையில் இளம் விடுதலை இயக்கம் வலிமை பெறுமுன்பாக அதனை அழித்துவிடக் கூடிய கயமை நிறைந்த சதித்திட்டம் என்று இப்பிரதிநிதித்துவம் பழிப்புரைக்கு உள்ளானது. பார்ப்பனர்களின் ஆதிக்கத்திலிருந்த புகழ்வாய்ந்த நாளேட்டில் இப்பிரதி நிதித்துவம் ஒரு பிரித்தாளும் சூழ்ச்சியின் வளர்ச்சி என்று எழுதப்பட்டது. இத்திட்டத்திற்கு முகமதியரிடமிருந்தே பெரும் ஆதரவு கிடைத்தது. இது தொடர்பாகப் பார்ப்பனர் அல்லாத மக்களிடம் பொதுக்கருத்தை உருவாக்க முடியவில்லை; அவர்களை ஒன்று திரட்ட முடியவில்லை. ஏனெனில் தங்கள் கருத்துகளை வெளியிடுவதற்கேற்ற பத்திரிகைச் சாதனங்களைத் தமக்கென்று சொந்தமாக வர்கள் வைத்திருக்க வில்லை. எல்லாச் சாதியினரும் ஏற்கக்கூடிய தலைவரை நியமிக்க பார்ப்பனர் அல்லாதாரிடமிருந்த ஒற்றுமையின்மை தடையாக இருந்தது. ஒவ்வொரு சாதியும் தங்கள் சாதிக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று விரும்பியது. பிரதிநிதித்துவம் பெற இயலாதவை தாம் பாதிக்கப்பட்டதாகக் கருதின.

இந்நிலைமைகள் யாவும் 1917-ஆம் ஆண்டில் நீதிக்கட்சி அரசியல் இயக்கமாக எழுச்சியுற்றபொழுது முழுமையாக இல்லாவிட்டாலும் கணிசமான அளவு மாறின. பார்ப்பனர்கள் தமது அதிகாரத்தைத் தன்னாட்சி முறையின் மூலம் கைப்பற்றிச் செழிப்படைந்து வந்ததைக் கண்டு அஞ்சி, பார்ப்பனர் அல்லாத உயர்சாதிச் சான்றோர்கள் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தனர். இதன் விளைவாகப் பொதுமேடையில் பார்ப்பன எதிர்ப்புக் கருத்துகள் பரப்பப்பட்டன. அத்துடன் இதற் காகவே சில செய்தித் தாள்களும், இதழ்களும் பார்ப்பனர் அல்லா தாரால் தொடங்கப்பட்டன. 1916-இல் இக்கருத்துகள் உச்சநிலையை அடைந்தன. மிண்டோ மார்லி திட்டத்தின் கீழ் மத்திய சட்டமேலவைக் குரிய உறுப்பினர்களின் தேர்தல் நடத்தப்பட்டது. பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தின் தலைமைச் சுடராக விளங்கிய டாக்டர் நாயர் ஒரு வரை யறுத்த தொகுதியில் தோற்கடிக்கப்பட்டுப் பார்ப்பனர் ஒருவர் தேர்ந் தெடுக்கப்பட்டார். இத்தோல்வியானது பார்ப்பனர் எதிர்ப்புக்கு ஒரு சவாலாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து இவர்கள் முன்னை விடவும் பல மடங்கு வீறுடன் செயலாற்றத் தொடங்கினர். இந்தப் புதிய இயக்கத்தில் டாக்டர் நாயர் ஈடுபட்டதன் சொந்தக்காரணம் முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆங்கிலேயரின் கொள்கைகள் குறைந்தது சென்னை மாநிலத்தைப் பொறுத்த அளவிலாவது இந்தப் புதிய வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பவை களாக இருந்தன. அத்துடன் இங்குள்ள மக்களில் ஒரு பிரிவினர் ஆங்கிலேய ஆட்சியை விரும்பி ஏற்கக்கூடியவர்களாகவும், ஆங்கிலே யர்கள் இங்கேயே நிரந்தரமாகத் தங்குவதை விரும்பக் கூடியவர் களாகவும் இருந்தனர். எனவே இந்தப் புதிய வளர்ச்சிக்கு ஆங்கிலேயர் உதவியும் ஆதரவும் அளித்தது இயற்கையே.

11· சில வரலாற்று அனுமானங்கள்

பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் வலிவு பெற்றுத் திகழ ஆரம்பித்த போது பார்ப்பனத் தலைவர்கள் மிகச் சிறந்த அறிவுத் திறத்துடன் செயல்பட்டிருக்கலாம். ராஜாஜி சென்னை காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இல்லாத நிலையிலும் கட்சியில் மிகப்பெரும் செல் வாக்குடையவராய் விளங்கினார். இவ்வாறே அந்தக் கட்சியின் பிற தலைவர்களும் ஆற்றல் வாய்ந்தவர்களாக விளங்கினர். இந்தத் தலைவர் களுள் ஒருவரால் கூடத் தங்களுடைய சிந்தனையையும் அறிவையும் மறைத்துக் கொண்டிருந்த மாயையின் முகத்திரையைக் கிழித்தெறிய முடியவில்லை. பார்ப்பனர் அல்லாதாரின் சிலவகை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், சமூகநீதி குறித்த கோரிக்கைகளின் தவிர்க்க இயலாத நிலையினைப் பார்ப்பனர்கள் முன்கூட்டியே அறிந்திருக்கவேண்டும். பார்ப்பனர்கள் தங்களுடைய பழைய நண்பரும், சில ஆண்டுகள் காங்கிரசில் தங்களோடு சேர்ந்து பணியாற்றியவருமான ஈ. வெ. இராம சாமியைச் சமாதானப்படுத்த முயற்சி செய்திருக்கவேண்டும். தாங்கள் தாம் ஆண்டவனின் பிரதிநிதி, அறிவுத்திறனில் மேம்பாடுடையவர்கள் என்னும் கருத்துகளில் பார்ப்பனத் தலைவர்கள் கொண்டிருந்த உறுதி பார்ப்பனர் அல்லாத குழுவினரின் மனத்தில் இருந்த அச்சத்தை நீக்கத் தவறியது. அத்துடன் காலங்காலமாக வந்த தங்களது முறைகேடான அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் முயற்சியையும் அவர்கள் மேற்கொண்டிருந்தனர். அதில் அவர்கள் பெற்ற தோல்வியின் விளைவாக அரை நூற்றாண்டு கழித்து திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களின் குரல் எல்லா இடத்திலும் எதிரொலிக்கலாயிற்று. அதாவது பார்ப்பனர்களுடைய வருணாசிரமப்படி நான்காவது சாதியின் ஆட்சி—சூத்திரர்களின்—ஆட்சி ஏற்பட்டது. இந்தச் சூத்திரர் ஆட்சிக்குப் பார்ப்பனர் அல்லாதாரின் கொள்கை விளக்க அறிக்கை அடிப்படை அமைத்துக்கொடுத்தது. இந்த ஆட்சியின் ஆதாரக்கல் நீதிக்கட்சியால் நாட்டப்பட்டது.

12. தமிழ் மறுமலர்ச்சி

நீதிக்கட்சியின் சாதனைகளை நாம் மதிப்பீடு செய்யத் தொடங்கு வதற்கு முன்பாக இக்கால கட்டத்தில் இலக்கிய, பண்பாட்டுப் பரப்பில் ஏற்பட்ட விழிப்புணர்வு குறித்துச் சில கூறவிழைகின்றேன். தேசிய இயக்கம் பழைமைவாய்ந்த இந்துப்பண்பாடு, இலக்கியம் குறித்த ஆய்வை மேற்கொள்ளப் பெரும் ஊக்கம் அளித்தது. எந்த அரசியற் புரட்சியா யினும், இது போன்ற கலை, இலக்கிய, பண்பாட்டு மறுமலர்ச்சியோடு இணைந்த ஒன்றாகவே இருக்கும். திராவிடர் விழிப்புணர்ச்சியின் காரணமாக எழுந்த ஊக்கத்தினால் தமிழ் இலக்கியம் முழுச்சிறப்புற்று மலர்ந்தது. தமிழ் இசை, கலை, கவிதை, நாடகம் ஆகியவை தனித்த வடிவம் பெற்றன. தமிழ் உரைநடை பல்வேறு வகை களிலும் விரிவும் வளர்ச்சியும் உடையதாக மாறியது. ஆயினும் இந்த மறுமலர்ச்சி பார்ப்பனர் அல்லாத அல்லது திராவிட இயக்கத்தினரின் ஆதரவால் மட்டுமே ஏற்பட்டதன்று என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் மேம்பாட்டில் காங்கிரஸ் கட்சிக்கு மிகுந்த பங்குண்டு. அத்துடன் பார்ப்பனக் கவிஞர் களும், அறிஞர்களும் இம்மறுமலர்ச்சியில் மதிக்கத்தகுந்த இடம் வகித் தனர். பேச்சுத்தமிழும் தனி கவனம் பெற்றது. இப்பேச்சுத்தமிழ் 19-ஆம் நூற்றாண்டில் எதிர்பார்த்திராத ஓர் உயர்நிலையை அடைந்து மதிப் புற்றது. இத்துறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் எழுத்தாளர் களும் சொற்பொழிவாளர்களும் பெரிதும் தொண்டாற்றி உள்ளனர்.

13. தற்பற்று

இம்மறுமலர்ச்சியின் துணை விளைவாக புதிய உலகத்தேவைகள் அனைத்தும் பழந்தமிழ் மொழியிலும் தமிழ்நாட்டிலும் இருந்தன என்று குறிப்பிடும் மிகையான தற்பற்றுணர்ச்சி வளர்ச்சியுறலாயிற்று. இத்தற் பற்றானது தமிழுக்கோ, தமிழருக்கோ நிறைந்த பலன் தராத இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கும் வழி கோலியது. இந்தி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளால் தமிழுக்குத் தீங்கு நேராது என்பதை இத்தீவிரத் தற்பற்றாளர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. தென்னிந்தியர் களையெல்லாம் 'மதராஸிகள்' என்றும், 'கருப்புக் காட்டுமிராண்டிகள்' என்றும் கருதி வந்த இந்தியாவின் பிற பகுதியினர் இதன்பின் தென்னக மக்களைப் பற்றி நன்கு புரிந்து கொண்டதோடு அவர்களுடைய பண்புகள், மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பைப் பாராட்டவும் முற்பட்டனர். ஒருவகையில், தொடக்கத்தில் திராவிடச் சார்பு அவர் களுக்கு அதிர்ச்சியை அளித்தது. திராவிடச்சார்பு, தமிழ்த்தற்பற்று

இவற்றின் அடியாக எழுந்த ஒரு விரும்பத்தகாத போக்கு காரணமாகத் திராவிட நாடு கோரிக்கை தொலை நோக்குச் சிந்தனை படைத்த அரசியல் மேதையாகிய அண்ணாவால் கைவிடப்பட்டது. தமிழர்களின் புத்தெழுச்சியை இந்திய தேசிய நீரோட்டத்தில் கலக்கச்செய்வதற் காகவும் நாடு தழுவிய பண்பாட்டு மறுமலர்ச்சிக்காகவும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

முடிவாக, இந்த மொழி, பண்பாட்டு மறுமலர்ச்சி ஆகியவை தமிழ ருக்கே உரியது என்றோ அல்லது திராவிட இயக்கத்தின் தனிச்சிறப் புடைய கொடை என்றோ கருதமுடியாது. இத்தகைய மறுமலர்ச்சி வேறு சில இடங்களிலும் நடந்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, கேரளா, குஜராத், வங்காளம், ஒரிசா ஆகிய மாநிலங்களைக் குறிப்பிடலாம். இது பெரும் மறுமலர்ச்சியினுடைய ஒரு கூறே ஆகும்; தவிர முழுமை யான மறுமலர்ச்சி அன்று. இம்மறுமலர்ச்சிக்குத் திராவிட இயக்கம் தனித் திருப்பத்தையும், மொழி உணர்ச்சியையும் நல்கி இதனைத் தனித் தன்மையுடையதாகவும், தற்பற்றுடையதாகவும் மாற்றியது.

சொற்பொழிவு 2

திராவிட இயக்கத்தின் மாறிவரும் அரசியல் படிநிலைகள்

1. படிநிலைகள்

சென்னை மாநிலத்தில் பார்ப்பனர் அல்லர்தார் இயக்கம் மூவகைப்படி நிலைகளில் அடங்குகிறது. அவை: 1. பார்ப்பனர் அல்லாதார் இயக்கத் தின்கொள்கை விளக்க அறிக்கை வெளியிடப்பெற்ற 1916-ஆம் ஆண்டு முதல் 1926 வரையிலான காலப்பகுதி. இது நீதிக்கட்சியின் காலம் ஆகும். 2. பெரியாரின் தலைமையில் அமைந்த, திராவிடச் சார்பு மிக்கிருந்த 1926 முதல் 1949-க்கு இடைப்பட்ட காலப்பரப்பு. இக்காலப்பகுதி திராவிடர் கழகம், சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் தோற்றத்தை உள்ளடக்கியது. 3. 1949 முதல் அண்ணா பெரியாரிடமிருந்து பிரிந்து சென்ற காலப்பகுதி. இந்தப்படிநிலை முற்றிலும் அரசியலைச் சார்ந்தது. ஆதலின் இதைப் பார்ப்பனர் அல்லாதார் இயக்கததின் தொடர்ச்சி என்று முழுமையாகக் கொள்ளவியலாது. 1949 வரை தமிழ்நாட்டு அரசியல், சமூக வாழ்வில் திராவிட இயக்கத்தின் படிநிலைகளான நீதிக்கட்சி, திராவிட இயக்கம் ஆகியவற்றின் கருத்துகள் நிரந்தரமாகச் செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும், பார்ப்பனர் அல்லாத அல்லது திராவிட இயக்கம் சமூக, அரசியல் எதிர்ப்பு இயக்கமாகச் சொல்லப்பட்டு வந்த நிலை 1949-ஆம் ஆண்டு வாக்கில் மங்கலாயிற்று.

2. ஆங்கிலேயரின் துணையுடன் தன்னாட்சி

1916-ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்தியாவில் தன்னாட்சிக்கு ஓரளவு வடிவம் கொடுக்க முயற்சி செய்தனர். அன்றியும் தங்களுடைய ஆட்சி அதிகாரத்தைத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இந்தியர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க விரும்பினர். இந்த நோக்கத்திற்குச் சென்னைச் சூழ்நிலை மிகவும் உகந்ததாக இருப்பதை ஆங்கிலேயர் உணர்ந்தனர். நிலப்பிரபுக்களில் சிலர் ஒரு கட்சியை உருவாக்கினர். இக்கட்சியின் கொள்கை விளக்க அறிக்கையில், "ஆங்கிலேய ஆட்சியின் செல்வாக்கையும் ஆணையுரிமையையும் அழிக்க முனையும் எந்த ஒரு இயக்கத்திற்கும் ஆதரவு அளிப்பதில்லை" என்று அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்கள். தென்னிந்தியர் விடுதலைக் கழகத்தின் அதிகாரப்பூர்வமான ஏடாகிய 'பார்ப்பனர் அல்லாதார்' (*Non-Brahman*) ஏட்டில் இந்தக் கருத்து மேலும் வரையறுத்து விளக்கப்பட்டது: "நம்முடைய நோக்கம தன்னாட்சி அமைத்தலாகும். ஆனால் அதே சமயத்தில் அத்தன்னாட்சி ஆங்கிலேயர்களால் வழி நடத்தப்பட வேண்டும் என விரும்புகிறோம்." இந்தக் காலத்தில் இக்கழகம் திராவிடர் விடுதலைக் கழகம் என அழைக்கப்படாமல் அது தென்னிந்தியர் விடுதலைக் கழகம் என்றே அழைக்கப்பட்டது என்பதை இங்குக் கருத்திற்கொள்ள வேண்டும். சென்னை அரசுக்கு அளிக்கப்பெற்ற கோரிக்கை மனுவில் இத்தென்னிந்தியர் விடுதலைக் கழகம் சென்னை மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்குப் பிரதிநிதித்துவம் தரமுடியாது என்று வாதிட்டது. இந்தியாவில் தன்னாட்சி முறை மரபில் இல்லை யென்றும், இந்தியர்க்குத் தன்னாட்சி முறை சார்ந்த பயிற்சி படிப்படி

யாக வழங்கப்படவேண்டும் என்றும் டாக்டர் நாயர் தமது சொற்பொழி வொன்றில் குறிப்பிட்டதை டி. வரதராஜுலு நாயுடு தமது "நீதிக்கட்சி இயக்கம்" என்னும் நூலில் மேற்கோளாக எடுத்துக்காட்டுகின்றார். இது, நீதிக்கட்சி ஒரு போதும் விடுதலை அல்லது தன்னாட்சிக்கு எதிரானது அன்று என்பதை வலியுறுத்துகின்றது. விடுதலை அல்லது தன்னாட்சி படிப்படியாக வரவேண்டும் என்பது அவர்களது கருத்தாகும். அவர்களு டைய கருத்துப்படி சுதேசி ஆட்சி என்பது பார்ப்பனர்களின் ஆட்சியாகும்.

நீதிக்கட்சியினர், தேர்தல்களில் பார்ப்பனர்களை எதிர்த்துச் சமமாக நின்று போட்டியிடமுடியவில்லை என்றும், பார்ப்பனர் அல்லாதாரின் எண்ணிக்கை, சொத்து, கல்வி, வரி செலுத்தும் அளவு ஆகியவைகளின் அடிப்படையில் வகுப்புவாரித் தேர்தல் தொகுதிகள் தங்களுக்கு ஒதுக்கப் படவேண்டும் என்றும் வாதிட்டனர். நடந்து முடிந்த பல தேர்தல்களில் பெற்ற அனுபவங்களை வைத்து எண்ணுகின்ற பொழுது இந்நாளிலும் 96 விழுக்காடு பெரும்பான்மை மக்கள் மிகச் சிறுபான்மையான 4 விழுக் காடு மக்களிடமிருந்து தற்பாதுகாப்பைத் தேடுகின்ற நிலையே நிலவு கின்றது. இந்தக் கோரிக்கைகளை நீதிக்கட்சி வைத்தபின்னும், நீதிக் கட்சியினர்பால் ஆங்கிலேயர் மறைமுகமாகப் பரிவு கொண்டிருந்த போதிலும், பார்ப்பனர் அல்லாதார்க்குத் தனித் தேர்தல் தொகுதிகள் ஒதுக்கப்படவேண்டும் என்ற மாண்டேகு செம்ஸ் போர்டு அறிக்கை யினை அரசு ஏற்கவில்லை. ஏனெனில், இதன் மூலம் சிறுபான்மை யோரிடமிருந்து பெரும்பான்மையோர் பாதுகாப்பு கோருகின்ற கருத்து அவர்களுக்கு மனமொப்பக்கூடியதாயில்லை. தனித்தேர்தல் தொகுதி களின் தன்மையை ஆராய்ந்து வரையறுக்கும் பொறுப்பு 1918-இல் அமைக்கப்பட்ட சவுத்பொரோ குழுவிற்கு அளிக்கப்பட்டது.

3. வகுப்பு அடிப்படையில் தேர்தல் தொகுதி

வகுப்பு அடிப்படையில் தேர்தல் தொகுதிகளுக்கு ஆதரவு திரட்டு வதற்காகப் பார்ப்பனர் அல்லாதாரின் மாநாடுகள் தொடர்ந்து நடத்தப் பெற்றன. அம்மாநாடுகளில் சவுத்பொரோ குழுவைப் புறக்கணிப்பது என்ற கருத்துக்கூட நிலவியது. சவுத்பொரோ குழு பார்ப்பனர் அல்லா தார்க்குத் தனித் தேர்தல் தொகுதிகள் அமைத்தல் இயலாதது என அறிக்கை அளித்தது. சாதி இந்துக்களை மட்டும் கணக்கில் கொண்டு பார்க்கும்பொழுது பார்ப்பனர் அல்லாதாரும், பார்ப்பனரும் 22க்கு 1என்ற விகிதத்தில் அமைந்திருப்பதாலும், வாக்காளர்களுக்கு இருக்க வேண்டு மெனச் சொல்லப்பட்ட சொத்துரிமை, மற்றும் பிற தகுதிகளின் அடிப் படையில் பார்க்கின்ற பொழுது பார்ப்பனர் அல்லாதாரும், பார்ப்பனரும் 4க்கு 1 என்ற விகிதத்தில் அமைந்திருப்பதாலும் மேற்சொன்ன முடிவு அளிக்கப்பட்டது. பார்ப்பனர் அல்லாதார் தமக்குள் ஒருங்கிணைந்து அந்தந்தச் சாதிகளின் மக்கள்தொகை அடிப்படையில் உரிய பிரதிநிதித் துவத்தைப் பெற முயற்சி செய்ய வேண்டும் என்று அக்குழு கருதியது. பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தின் மீது பரிவுகொண்ட இந்திய அரசு சவுத்பொரோ குழுவின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஜனநாயக அமைப்புகளில் பங்கு கொண்டு பழகிய நாட்டில் எண்ணிக்கை பலம் பொருத்தமாக இருக்கலாம். சமூக மற்றும் அரசியல் உண்மை நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது தென்னகத்தில் பார்ப்பனர் அல்லாதாரின் எண்ணிக்கையின் வலிமை மேன்மையடையாது. மற்றும் பார்ப்பன ஆதிக்கமுடைய ஒரு சிறு குழுவினிடம் ஆட்சி சென்றுவிடும் என்று சென்னை ஆட்சியாளர்கள் கூறிய கருத்துகளின் அடிப்படையில் இந்திய அரசு சவுத்பொரோ குழுவின் கருத்துகளை ஏற்கவில்லை. ஆகையால், சென்னை சட்டமன்றத்தில் முகமதியர் அல்லாதார்க்குரிய 61 பொது இடங்களில் குறைந்தது 30 இடங்களாயினும் பார்ப்பனர் அல்லாதார்க்கு ஒதுக்கப்படவேண்டும் என்றும், மீதமுள்ள இடங்களைப் பொதுத் தொகுதியாக்க வேண்டும் என்றும் இந்திய அரசு பரிந்துரைத்தது. ஆயின் இட ஒதுக்கீடு குறித்த போர் முடிவு பெறவில்லை. அத்துடன் பார்ப்பனர் அல்லாதாரின் தலைவர்களும் இதனைக் கைவிடும் மனநிலையில் இல்லை. அவர்கள் அரசியல் மற்றும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான திறன்களை விரைவாகப் பெற்று இந்தப் பிரச்சினையை இந்தியாவிலும் மற்றும் இங்கிலாந்திலும் வலியுறுத்தினார்கள். இந்திய அரசின் பரிந்துரையின் பேரில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் 1919-ஆம் ஆண்டின் இந்தியச்சட்டத்தை நிறைவேற்றியது. இதன்படி இச்சட்டம், இட ஒதுக்கீட்டுக் கொள்கையை அனுமதித்தாலும் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கையையும், அதன் அமைப்புத்தன்மைகளையும் அந்தந்த இடத்தில் போட்டியிடும் தல கட்சிகளின் முடிவுக்கே விட்டுவிட்டது. ஏறத்தாழ இக்காலத்தில் விலிங்டன் பிரபு பம்பாயிலிருந்து சென்னைக்கு மாற்றம் பெற்ற நிகழ்ச்சி சில வகையில் பார்ப்பனர் அல்லாதாரின் செயலுக்கு ஆதரவாயிருந்தது. விலிங்டன் இதுபோன்ற போராட்டங்களைப் பம்பாயில் வெற்றிகரமாக நிர்வகித்திருந்ததால் இந்த மாற்றம் நீதிக்கட்சியினர்க்கு உதவும் நோக்கத்துடன் ஏற்படுத்தப் பட்டதே என நம்பப்பட்டது. ஆனால் 75 விழுக்காடு இடங்கள் பார்ப்பனர் அல்லாதார்க்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும் என்ற கருத்தையே பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தினர் வலியுறுத்தினர். விலிங்டன் 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யத் தயாராக இருந்த போதிலும் இந்தச்சிக்கலை அவரால் கூடத் தீர்க்க இயலவில்லை.

அடுத்து வந்த மெஸ்டன் அவார்டு 24 இடங்கள் மட்டுமே தர இசைந்ததும், "பார்ப்பனர் அல்லாதாரின் எண்ணிக்கையின் வலிமை முறையான அமைப்புகளால் தகர்க்கப்படவேண்டும்" என்று கூறியமையும் பார்ப்பனர் அல்லாதார் தலைமைக்குப் பேரிடியாய் அமைந்தன. இட ஒதுக்கீடு குறித்து நிகழ்ந்த இத்தகைய கசப்பான சண்டை பார்ப்பனிய எதிர்ப்புணர்ச்சிகள் உயிர்கொள்ளவும், பார்ப்பன வெறுப்பு, பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தொண்டர்களின் கொள்கையாக உருவெடுக்கவும் காரணமாயிற்று.

இறுதியில் ஓர் உடன்பாட்டுத் தீர்வு இந்திய அரசால் வழங்கப்பட்டது. இத்தீர்வு விலிங்டன் பிரபுவின் கருத்துகளை ஒட்டியே

அமைந்தது. இதன்படி 50 விழுக்காடு இட ஒதுக்கீட்டுடன்–பார்ப்பனர் அல்லாதார் அதற்கு மேற்பட்ட எத்தனை இடங்களில் வேண்டுமானாலும் போட்டியிடலாம் என்ற உரிமையும் வழங்கப்பட்டது. இதனால், தங்களுடைய பெரும்பான்மை, சட்டமன்றத்தில் சிறுபான்மையாகக் குறைக்கப்படும் என்ற பார்ப்பனர் அல்லாதாரின் அச்சம் நீங்கியது. பல்வேறு இனத்தவர்கள் வாழுகிற ஒரு சமூகத்தில் சிறுபான்மையோருக்குச் சாதாரணமாக வழங்கப்படுகின்ற அனைத்துப் பாதுகாப்புகளும் பெரும்பான்மையோருக்குக் கொடுக்கப்பட்டமை எந்த அரசியல் வரலாற்றிலும் காணமுடியாத ஒரு தனிக்கூறாகும். கால ஓட்டத்தில் எதிர்கால வரலாற்றறிஞர்கள் இதனைப் பார்ப்பனர் அல்லாதார்க்குரிய வெற்றி என ஏற்று மகிழ்வார்களா என்பது கேள்விக் குறியாகவே இருக்கும்.

4. நீதிக்கட்சியின் தேர்தல் வெற்றிகள்

மேற்குறித்த முடிவின் அடிப்படையில் 98 இடங்களைக் கொண்ட சட்டமன்றத்தில் 1920, 1923, 1926 ஆகிய ஆண்டுகளில் அடுத்தடுத்து நடைபெற்ற மூன்று தேர்தல்களிலும் முறையே 57, 61, 56 இடங்களைப் பெற்றுப் பார்ப்பனர் அல்லாதார் பெரும்பான்மையினராகத் திகழ்ந்தனர். சட்டமன்றத்தில் 17, 14, 18 என இடங்களைப் பெற்றுவந்த பார்ப்பனர்கள் தங்களுடைய வலிமை எண்ணிக்கையை மட்டுமே சார்ந்திருக்கவில்லை எனக் காட்டினர். மற்ற 24 இடங்கள் முகமதியர் உள்ளிட்ட சிறப்புப் பிரிவினருடைய நிலைத்த இடங்களாக இருந்தன. இப்பெரும்பான்மை காரணமாக மாநிலத்தில் நடைபெற்ற இரட்டை ஆட்சியில் 1920 முதல் 1926 வரை நீதிக்கட்சி பங்கேற்க முடிந்தது. எனினும், பார்ப்பனர் அல்லாத மக்கள் திரள் அனைத்தும் நீதிக்கட்சியுடனும், பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்துடனும் இணைந்திருந்தன என்று கூறமுடியாது. காங்கிரஸ் இயக்கத்தின் வரலாற்றிலிருந்து தெளிவாக அறிவதைப்போல் பார்ப்பனர் அல்லாத எல்லா வகுப்பைச் சார்ந்த நிலக்கிழார்கள், கற்றவர்கள், விவசாயிகள் ஆகியோர் காங்கிரஸ் கட்சியில் இருந்தனர். ஆனால் காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தை மேற்கொள்ள முடிவு எடுத்ததால் அது எதிர்க்கட்சியாகச் சட்டமன்றத்தில் செயல்படவில்லை.

நீதிக்கட்சியைத் தொடக்கத்தில் எதிர்ப்பதற்கு முறையாக உருவான எதிர்க்கட்சி இல்லை. காங்கிரஸைச் சாராத பார்ப்பனர்களின் ஒரு பிரிவினரிடமிருந்து மட்டுமே எதிர்ப்புக்குரல் எழுந்தது. மற்றவர்கள் பொதுவாக அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். 1923-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் பார்ப்பனர் அல்லாதார் மிகப்பெரும்பான்மையை அடைந்தனர். (சென்ற தேர்தலில் 57 இடங்களைப் பெற்ற இவர்கள் இத்தேர்தலில் 61 இடங்களைப் பெற்றனர்). இவர்களில் சிலர் நீதிக்கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்லர். சி. ஆர். தாஸின் அனைத்திந்தியத் தலைமையை ஏற்றுக்கொண்டு காங்கிரஸில் அதிருப்தியாளர்

குழுவாக இயங்கிய சுயராஜ்யக் கட்சி சட்டசபைக்குள் நுழைந்தது. அவர்களுள் பார்ப்பனர் அல்லாதார் பலர் இருந்தனர். அந்தச் சமயத்தில் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்வதில் வழக்கமாக ஏற்படும் பூசலானது நீதிக்கட்சியிலும் ஒரு பிளவை ஏற்படுத்தியது. மூன்றாவது தேர்தலில் 56 பார்ப்பனர் அல்லாதார் இருந்த போதிலும் அவர்களில் பலர் சுயராஜ்யக்கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தனர். நீதிக்கட்சி 20 இடங்களைப் பெற்றிருந்தபோது அவர்கள் 40 இடங்களைப் பெற்றிருந் தனர். அந்த 40 சுயராஜ்யக் கட்சியினரில் பலர் பார்ப்பனர் அல்லா தாராய் இருந்திருக்க வேண்டும்.

5. நீதிக்கட்சியின் சரிவு

நீதிக்கட்சி 1937-ஆம் ஆண்டு வரை அரசியல் கட்சியாக நீடித்தபோதி லும் அக்கட்சியின் சரிவு 1926-ஆம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டது. 1927க்குப் பின்னர் நீதிக்கட்சி தனியாக அமைச்சரவை அமைக்காத போதிலும் அடுத்து அமைக்கப்பட்ட சுயேட்சைகளின் அமைச்சரவை மீது ஆதிக்கம் செலுத்திவந்தது. 1935-ஆம் ஆண்டு இந்தியச் சட்டப்படி நடைபெற்ற முதல் தேர்தலில் நீதிக்கட்சி, தான் போட்டியிட்ட 86 இடங் களில் 12 இடங்களை மட்டும் பெற்றபோது தன்னுடைய வீழ்ச்சியைச் சந்தித்தது. இதன் பின்னர் அக்கட்சி பின்னுக்குத் தள்ளப்பட்டது. நீதிக்கட்சி ஆட்சியில் இருந்த காலத்தை அரசியல் விஞ்ஞானிகளும் மற்றும் அரசியல் நோக்கர்களும் இங்கு (சென்னையில்) பாராளுமன்ற ஜனநாயகம் சிறப்பாகச் செயல்படுவதற்குரிய இருகட்சி ஆட்சி முறை யானது தொடங்கிவிட்டதாகக் கருதினர். சட்டமன்றத்தில் சுயராஜ்யக் கட்சி நுழைந்தபோது பல்வேறு குழுக்கள் எதிர்க்கட்சியாய் இயங்கின. அங்கு உண்மையாகவே ஒருங்கிணைக்கப்பெற்ற பாராளுமன்ற எதிர்க் கட்சி இருந்தது. 1935-ஆம் ஆண்டு இந்தியச் சட்டப்படி நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு, நீதிக்கட்சியின் செயற்பாடுகள் இவ்வெல்லா நம்பிக்கைகளையும் பொய்யாக்கின. ஒரு பெரிய எதிர்க்கட்சியாகக்கூடச் செயலாற்ற இயலாத இக்கட்சியின் அரசியல் வீழ்ச்சிக்கு, அக்கட்சி மக்கள் ஆதரவை அடிப்படையாகக் கொண்டிராததும் கிராம அளவில் கட்சிக்கான தொண்டர்களைப் பெற்றிராததும் காரணமெனக் கொள்ள வேண்டும். அது தலைவர்களின் கட்சியாக இருந்ததே தவிர மக்களின் கட்சியாக இல்லை. கிராம அளவிலோ, தொகுதி அளவிலோ அல்லது மாவட்ட அளவிலோ, கூட கட்சியமைப்பு இல்லாததால் பயனளிக்கும் வகையில் செயல்படவில்லை. கட்சியை நடத்திச் சென்ற பகட்டான உடையணிந்த இராசாக்கள், ஜமீன்தார்களின் கவர்ச்சியால் மக்கள் திரளை நீண்ட நாட்களுக்குக் கட்டிக்காக்க இயலவில்லை. பல்வேறு பட்ட பார்ப்பனர் அல்லாத சாதிகளிடையே ஒத்த இயல்பில்லாமை முக்கிய காரணமாகும்.

பரம்பரையாகப் பல பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வந்த சில சாதியினர் நீதிக்கட்சியைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்தனர்.

இதனால் இச்சாதியினைச் சார்ந்த இளம் பட்டதாரிகளுக்கு ஆட்சிப் பணிகள் ஏராளமாக வழங்கப்பட்டன. அவர்கள் வருவாய்த் துறையிலும் நீதித்துறையிலும் மாவட்டத்துணை ஆட்சித்தலைவர், வட்டத் துணை ஆட்சியர், மற்றும் முன்சீப்புகளாக மிகுந்த எண்ணிக்கையில் இடம்பெற்றனர். பின்னர் நாளடைவில் உயர்பதவிகளிலும் இடம்பெற்றனர். இவ்வாறு இவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட, இவர்களினும் கீழாகக் கருதப்பட்ட சாதியைச் சார்ந்த–அதாவது அப்போதே கூடப் பிற்பட்ட வகுப்பினர் என்றழைக்கப்பட்ட சாதியைச் சார்ந்த-ஆர்வம்கொண்ட இளைஞர்களுக்குச் சிறு சிறு வாய்ப்புகள் கூட அளிக்கப்படவில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். மக்கள் திரளின் ஆதரவு, மாநிலம் தழுவிய கட்சியமைப்பு ஆகியன இன்மையால் நீதிக்கட்சி உரியகாலத்திற்கு முன்னரே விரைவான வீழ்ச்சியைத் தழுவ நேர்ந்தது. இதற்குப் பின்னர் பல ஆண்டுகள் கழித்து வந்த இளைய தலைவர்கள் பார்ப்பனர் அல்லாத கட்சியைப் புதுப்பித்து மக்களின் ஆதரவு, முறையான கட்டுக்கோப்பு கொண்ட கட்சியாக உருவாக்கும் பொறுப்பை வேறொரு பெயரில் மேற்கொண்டனர். இப்பணியைச் செய்த பெருமை அறிஞராகவும், சிறந்த எழுத்தாளராகவும், சொற்பொழிவாளராகவும் விளங்கிய, காஞ்சியில் தோன்றிய சி. என். அண்ணாதுரையைச் சாரும். நீதிக்கட்சியின் சட்டமன்றச் சாதனைகளும், ஆட்சி முறைச் சாதனைகளும் குறைத்து மதிப்பிடத்தக்கன அல்ல என்ற போதிலும் அவற்றை இங்கு விவரிப்பது இந்தச் சொற்பொழிவின் நோக்கம் அன்று.

ஆனால் நீதிக்கட்சியும், பார்ப்பனர் அல்லாதார் இயக்கமும் விட்டுச் சென்ற மரபு தற்போது ஆதிக்கம் செலுத்துவதும் தென்னிந்திய அரசியலிலும், சமூக வாழ்விலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த இருப்பதும் வரலாற்றில் குறிக்கத் தக்க ஒன்றாகும். இந்த மரபுகளை உருவாக்குவதில் பெரியாரின் பங்கு உளங்கவரக் கூடியது; ஆழ்ந்து கருதப்பட வேண்டியது.

6. பெரியாரும் திராவிட அம்சமும்

காசிநாத் காவலேகர் என்பவர் தனது பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் பற்றிய ஆய்வில், பெரியாரின் திராவிட இயக்க நுழைவை, திராவிடர் மாற்றங்களின் தொடக்கம் என்று விவரிக்கிறார். அப்பொழுது வரை இவ்வியக்கம் பார்ப்பனர் அல்லாதார் இயக்கமாக மட்டுமே இருந்தது. இது சட்டமன்றம், மாவட்டக்கழகம் இவற்றில் அதிகாரமும் செல்வாக்கும் பெறவேண்டும் என்பதையும், படித்த பார்ப்பனர் அல்லாதார்க்கு அரசுப்பணிகளில் மிகுந்த எண்ணிக்கையில் வேலைகள் பெற வேண்டும் என்பதையும் தனது வரையறுத்த குறிக்கோளாகக் கொண்டிருந்தது. பெரியார், விரிவான குறிக்கோள்களையும் அரசியல் பிரச்சாரம் கலவாத சமூகச்சீர்திருத்தப்பணிகளையும் மேற்கொண்டு

இந்த இயக்கத்தை நடத்தினார். அவர் இதனை ஒரு மக்கள் இயக்கமாக ஆக்கினார்; அதற்குத் தேவைப்படுகின்ற எல்லாப் பயிற்சிகளையும் அவர் பெற்றிருந்தார்.

பெரியார் நீதிக்கட்சிக்கு வந்து சேர்ந்தது திட்டமிட்டோ அல்லது தற்செயலாய் நிகழ்ந்த ஒன்றோ அன்று. பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் கட்சியால் வளர்க்கப்பட்ட பெரியார் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் குழுவிலும் பல முக்கிய பொறுப்புகளை வகித்தார். எனவே அவருக்குக் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறியவுடன் நீதிக்கட்சியில் சேருவது எளிய செயலாக இருந்திருக்க முடியாது. நீதிக்கட்சியில் சேருவது என்னும் முடிவை எடுப்பதற்கு முன் அவர் பல ஆண்டுகள் ஆத்மசோதனை செய்திருக்கவேண்டும். இதன் காரணமாக ஈ.வெ.ரா. மக்கள் தலைவராகவும், அம்மக்களோடு தொடர்பினை வளர்த்துக் கொள்பவராகவும் விளங்கினார். எனவே நீதிக்கட்சி அவரை 1938-ஆம் ஆண்டில் அக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. அந்தக் காலத்தில் மிகவும் காரசாரமாக விவாதிக்கப்பட்டு வந்த பொருளாகிய சட்டமன்றத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் குறித்துத் தீர்மானம் நிறைவேற்றுதல் உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் தமிழ்நாடு காங்கிரஸில் ஈ.வெ.ரா. தொடர்ந்து தோல்வியையும், சரிவையும் சந்திக்க நேர்ந்ததற்குப்பின்னால் அவர் 1926-இல் காங்கிரஸிலிருந்து வெளியேறினார். வெளியேறியபின் அவர் வாளாயிருக்கவில்லை. இடைப்பட்ட 12 அல்லது 13 ஆண்டுகளில் அவருக்கேற்பட்ட குறைகளைக் கூறிக்கொண்டிருக்கவுமில்லை. அவர் உடனடியாக 1939-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் சுய மரியாதை அல்லது தன்மான இயக்கத்தைத் தொடங்கினார். அதற்கும் முன்பாகவே—அவர் தென்னகத்தில் இந்திமொழி கற்பிக்கப்படுவதற்கு அல்லது பரப்பப்படுவதற்கு எதிராக நடைபெற்ற எதிர்ப்பில் பங்கேற்றார். அடுத்துவரும் நாற்பதாண்டுகளில் தாம் பரப்ப இருந்த சமூகம், சமயம், அரசியல் தொடர்பான கருத்துகள் அனைத்தையும் பெரியார் முன் பாகவே ஒழுங்கு முறைப்படுத்திக் கொண்டார். அவர் நாற்பதாண்டுக் காலமாகத் தமிழ் நாட்டில் வீறுநடை போட்டு வந்தார்.

7. திராவிடநாடு கோரிக்கை

பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்திலிருந்து மாறுபட்ட திராவிடர் இயக்கம் முதன்முதலாக 1939-ஆம் ஆண்டில்தான் வெளிப்படையாகத் தலைதூக்கலாயிற்று. அச்சமயத்தில் பிரிட்டனின் போர்முயற்சிகளுக்கு இந்தியரின் ஆதரவைத் திரட்டுவதற்காக முதல் அரசியல் பயணம் மேற் கொண்டிருந்த சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸிடம் பெரியார் திராவிடநாடு கோரிக்கையை முன்வைத்தார். மேலும், திராவிடர்களின் நல்வாழ்விற் காக, திராவிடர்களின் தாயகமாகிய சென்னை மாநிலம் இந்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட தனி மாநிலமாகப் பிரிக்கப்படவேண்டும் என்ற தீர்மானத்தை மாநாடு ஒன்றில் பெரியார் நிறைவேற்றச்செய்தார். இது, இந்தியா இரு நாடாகப் பிரிக்கப்படவேண்டும் என்று ஜின்னா உருவாக்கிய கொள்கையை ஒட்டி நிகழ்ந்தது. தனி நாடு கோரிக

கையைப் பரப்புவதற்காகவே திராவிட நாடு என்னும் தமிழ் வார இதழும் தொடங்கப்பெற்றது. திராவிட நாடு கோரிய நிகழ்ச்சி, தென்னகத்தின் பார்ப்பனர் அல்லாதார் அனைவரையும் திராவிடர்கள் என்ற கருத்திற்குக்கொண்டு சென்றது. மற்றும் 'திராவிடர்' என்ற சொல் எல்லா இயக்கங்களையும், கட்சிகளையும் தொற்றிக்கொண்டது. 'பார்ப்பனர் அல்லாதார்' என்ற சொல் இனவுணர்வுடையதாய் இல்லை. ஆனால் 'திராவிடர்' என்னும் சொல் இனச்சார்பும், இனவுணர்வும் உடையதாயுள்ளது. 'திராவிடர்' என்னும் பெயர் வியக்கத்தக்க அளவிலான தற்பற்று, தமிழ்ப் புத்துயிர்ப்பு ஆகியவற்றிற்கு இதற்கு முன் எப்பொழுதும் கண்டிராத அளவில் ஊக்கத்தையும், எழுச்சியையும் அளித்தது. ஆனால் திராவிட நாட்டைச் சார்ந்த பிற பகுதிகள் இந்தத் தனிநாடு கோரிக்கையை ஆதரிக்கவில்லை. இது, நீதிக்கட்சியின் பழைய சக்திகளான உயர்குடியினர், பிரபுக்கள், திவான்பகதூர்கள், ஜமீன்தார்கள் ஆகியோருக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்தது. 1944-இல் கூடிய சேலம் மாநாட்டில் கட்சி உறுப்பினர்களாக உள்ளவர்கள் அனைவரும் அரசுப்பணியையும், பட்டங்களையும் துறக்க வேண்டும் என்று பெரியார் வற்புறுத்தியது நிலைமையை மேலும் சீர்குலைத்தது. பெரியார் காங்கிரஸில் இருந்தபோது கற்ற இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தினார்.

8. திராவிடர் கழகம், திராவிடமுன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் தோற்றம்

பழைய நீதிக்கட்சியைச் சேர்ந்த பழைமைப் பற்றாளர்கள் பெரியாரின் இயக்கத்திலிருந்து தம்மை விலக்கிக் கொண்டனர். எஞ்சியிருந்தவர் களைக்கொண்டு திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது. பெரியாரும் அண்ணாவின் தலைமையிலான வீறுடைய இளந்தொண்டர்களும் இந்தப் புதிய மாறுதலுக்கான களத்தை முன்பே உருவாக்கிக் கொண் டிருந்தார்கள். முதன் முதலாக, கட்டவிழ்த்த பொதுமக்களைக் கொண்டு திராவிட இயக்கம் இளைய, தீவிர புரட்சிகாரத் தலைமையின் கீழ்த் தோன்றியது. இந்த மாற்றம் வருங்காலத்தில் தமிழகத்தின் தலை விதியைத் தெளிவாக மாற்றியமைப்பதாக இருந்தது. பெரியாருடைய கழகத்திலிருந்து பிளவுண்டவர்கள் 1949 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தை (தி. மு. க.) அமைத்தனர். தொடக்க காலத்தி லிருந்தே இதன் கொள்கை அரசியல் சார்ந்ததாகவும் வாக்குப்பெட்டி களின் மூலம் ஆட்சியைப் பிடிப்பதாகவுமே இருந்தது. இம்மாற்ற நிலைக்கு வருமுன் நாம் பெரியாருடைய நிலையான சாதனையைக் கருத்திற்கொள்ளவேண்டும்.

9. கடவுள் மறுப்பு, சுயமரியாதை இயக்கங்கள்

பெரியார் எதற்கும் உடன்படாத நாத்திக வாதியாக விளங்கினார்; இந்துக் கடவுள் சிலைகளை உடைக்க விரும்பினார். அவர் இந்துக் கடவுளரின் பெருமையைப் பழித்தார். மேலும் வடமொழிக் காப்பியங்

களையும், புராணங்களையும் இழித்துரைத்தார். அவர் நாத்திகத்தைப் பின்பற்றக்கூடிய உறுதியான தொண்டர் படையைப் பெற்றிருந்தார். எனினும், அது, மக்களுடைய இந்து சமய, சடங்கு முறைகளிலும், கோவில் வழிபாட்டிலும் கணிசமான அளவில் மாற்றங்களை ஏற்படுத்தியதா என நான் சந்தேகிக்கிறேன். விக்கிரக ஆராதனைக்கு எதிரான பெரியாரின் வாதத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர் ஒரு பகுத்தறிவுவாதி. அவர் சாதி முறையை ஒழிக்க விரும்பினார். ஆனால், வடமொழிக் காப்பியங்களிலும், புராணங்களிலும் வலியுறுத்தப் பட்டுள்ள கடவுள் தேவதைகளால் உருவான சாதி, இந்து சமய அமைப் போடு பின்னிப்பிணைந்து அதன் ஒரு பகுதியாகவே இருந்தது என்பதை அவர் உணர்ந்திருந்தார். சாதி கடவுளின் ஆணையால் வந்தது என்று விவரிக்கப்பட்டது. பகவத் கீதையும் இதனை வலியுறுத்துகிறது. "சதுர்வர்ண மாயா சிருஷ்டி" என்று கீதையில் பகவான் கூறுகிறார். நாத்திகர்களுடைய ஆராதனை எதிர்த்தாக்குதலால் சாதி மத உறவுகளும் கடவுள் நம்பிக்கையும், சாதியமைப்பும் அழியக் கூடும். மேலும் இந்து சமூக அமைப்பு முறையும் அழியும் என்று பெரியார் நம்பினார். ஆனால் இந்து மதம் மிகவும் வலிமையானது; இத்தகு வலுவான பல தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க வல்லது.

பெரியாருடைய போதனைகள் மக்களைச் சிந்திக்கச் செய்தன; அதனால் பெரும் சீர்திருத்தங்கள் மெல்ல மெல்ல விளைந்தன. மதம் தொடர்பான மனிதனுடைய பழக்க வழக்கங்கள் மாற்றம் பெறலாயின. அவருடைய தன்மானம் அல்லது சுயமரியாதைக் கொள்கையே அவரது நிலையான சாதனையாக இருக்கிறது. சுயமரியாதை என்பதில் சுய, மர்ஜதா என்பவை வடமொழி மூலத்திலிருந்து பிறந்தவை என்று கூறி, தமிழில் ஒரு வார்த்தையைக் கூடச் சிந்திக்க இயலாதவர் எனப் பெரியாரை அச்சமயத்தில் கேலி செய்தனர். செயல்வீரரான பெரியார் இதைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. சுயமரியாதை என்பதற்குப் பதிலாகத் தன்மானம் என்னும் சொல் கொள்ளப்பட்டது. தமிழர்கள் தங்கள் மொழிப்பற்றின் காரணமாகத் தன்மானம் என்ற சொல்லைக் கையாண்ட போதிலும் அதற்கு எதிராக, சுயமரியாதை என்னும் சொல் இங்கு நிலைத்துவிட்டது. இந்தச் சுயமரியாதை இயக்கம்தான் தமிழ் நாட்டிலுள்ள முகமதியர்கள், கிறித்தவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பார்ப்பனர் அல்லாதார் சிந்தனையை மாற்றியமைத்தது. இப்பொழுது ஒவ்வொரு தமிழனும் தான் யாருக்கும் தாழ்ந்தவன் அல்லன் என்றெண்ணுகிறான். மேலும் ஒவ்வொருவனிடத்தும் தான் தகுதியுள்ளவன் என்ற உணர்வு வளர்ந்திருக்கிறது. நிலவுடைமைக் கொள்கைகள் காட்டிய மனித உறவுமுறைகள் விரைவாக மறைந்து வருகின்றன. பிறப்பினாலும் தொழிலாலும் கருதப்பட்டுவந்த உயர்வு தாழ்வு இனியும் ஏற்கக் கூடியதாயில்லை. இது இந்திய வரலாற்றில் இணையற்ற ஒரு புரட்சியாகும். தமிழகத்தில், குறிப்பாகக் கிராமப்புறங்களில் இப்போதும் சாதியமைப்பு இருந்தபோதிலும் அது தன்னுடைய சடங்கு முறைகளில் இருந்த குருக்கள் ஆட்சிமுறையை மெல்ல மெல்ல இழந்து வருகிறது.

பெரியார், பகுத்தறிவின் மூலம் கடவுளையும் மதத்தையும் தாக்கியதோடு சாதியமைப்பின் கொடுமைகளைக் குறைக்கவோ அல்லது வேறு அடிப்படையில் சாதிகளுக்குள் சமத்துவத்தைக் கொண்டு வரவோ தீவிரமான முயற்சி எடுக்கவில்லை. ஆனால் அவர் சுயமரியாதை இயக்கத்தின் மூலம் நிறைவேற்றியவை அவரை இந்தியச் சமூகச் சீர் திருத்த வரலாற்றில் தலைசிறந்தவர்களுள் ஒருவர் என்று நினைவு கூரச் செய்கிறது. அவரது மறைவிற்குப் பிறகும் கூட அவரது கருத்து தமிழகத்திற்கு வெளியே பரவியது. பெரியாரின் நெருங்கிய தொண்டர்கள் அதிக அளவில் வளராவிட்டாலும் நீதிக்கட்சியினுடனோ அல்லது கழகத்தினுடனோ தொடர்பில்லாத எல்லாப்பிரிவு மக்களிடமும் அவரது கருத்துகள் நிலையாகப் பரவின. அவர், நாம் சுயமாகச் சிந்திக்கவும், தலைநிமிர்ந்து நடக்கவும் கற்றுத்தந்ததே அவருடைய மிகப்பெரிய தொண்டு என்பது எனது கருத்தாகும்.

10. அண்ணாவின் சகாப்தம்

சி. என். அண்ணாதுரை சிறந்த தமிழறிஞர், ஆங்கில இலக்கியம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றை நன்கு கற்றறிந்த அறிஞர். மேலும் தமிழ், ஆங்கிலப் பேச்சுக் கலையில் வல்லவர். இவர் பெரியாரைச் சார்ந்திருந்த ஆறு அல்லது ஏழு முன்னணித் தலைவர்களுடன் திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார். பெரியாரின் விக்கிரக ஆராதனை எதிர்ப்புக் கருவியாக இருக்க விரும்பாமல் ஒரு புதுமையான அரசியல் இயக்கமாக ஆக்கும் குறிக்கோளோடு தி. மு. க. வைத் தொடங்கினார். அவரது முதல் அணுகுமுறை சாமானியர்களை—எளிய மக்களை—நோக்கியது. ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைப்பதே தனது முதன்மையான பணி என்பதைத் தமிழ் மக்கள் திரள் நம்பும்படி அவர் செய்தார். அவர் வலுப்பெறத் தொடங்கி ஆட்சி இன்றோ நாளையோ தனது கைக்கு வரும் என்று உணரத்தொடங்கிய பின்பு, பார்ப்பன எதிர்ப்பைப் பரப்புவது பயன் தராது என உணர்ந்து கொண்டார். பார்ப்பன எதிர்ப்பு மெல்ல மெல்ல கைவிடப்பட்டது. தமிழரின் பழம் பெருமையையும் பழந்தமிழ் இலக்கியங்களின் அருமை பெருமைகளையும் எடுத்துக் கூறித் தனது கட்சியின் ஆரம்பகால நிலையில் வலுவை ஏற்படுத்துவதற்குத் தேவையான தமிழ்ப்பற்றை வளர்ப்பதில் வெற்றி கண்டார். அவர் அரசியலில் உயர்ந்த இடம் பெற்றவுடன் வெறும் உணர்வைத் தூண்டும் நிலையிலிருந்து தம்மை மாற்றிக்கொண்டார். மேலும் அரசியல் மேதைமை போன்ற குணங்களால் தன்னைச் சிறந்த அரசியல் வாதியாகவும், தொலைநோக்குடைய ஆட்சியாளராகவும் மெய்ப்பித்தார்.

11. பிரச்சார வெற்றி

பெரியாரின் திராவிடர் கழகம், அண்ணாவின் திராவிடமுன்னேற்றக்கழகம் ஆகியவற்றிற்குச் சமூகக் குறிக்கோளைப் பொறுத்த

அளவில் வேறுபாடுகள் இல்லை. பெரியார், சமூக விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல், மூடநம்பிக்கை, புனிதர்களின் கொடுங்கோன்மை, அரசிய லிலும், ஆட்சித்துறையிலும் இருந்த பார்ப்பனர் ஆதிக்கம் ஆகியவற்றை ஒழித்தல் என இவற்றிற்காகத் தனது சக்தியை அர்ப்பணித்தார். இக்கருத்துகளைப் பரப்புவதற்காக அவர் தளராது பேசியும் எழுதியும் வந்ததோடு பல சூறாவளிச் சுற்றுப் பயணங்களையும் மேற்கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகம் பெரியாரின் மேற்சொன்ன கொள்கை களுக்காக ஆட்சியைக் கைப்பற்றுவதன் மூலம் அவற்றை நிறை வேற்றலாம் என முயற்சி செய்தது. திராவிட முன்னேற்றக் கழகம் விளக்கக் கூட்டங்களையும் கண்டனக் கூட்டங்களையும் நாடு தழுவிய அளவில் நிகழ்த்தியது. அது தனது வலிமையை எடுத்துக்காட்ட நல்லதொரு வாய்ப்பினை 1953-இல் பெற்றது. இராஜாஜி குறுகிய காலத்திற்கு முதலமைச்சராகப் பதவி வகித்த போது, பள்ளிகளில் தொழிற்கல்வியின் ஒரு பகுதியாக மாணவர்கள் அவரவர் குலத் தொழிலைச் செய்யவேண்டும் என்னும் குலக்கல்வித் திட்டத்தை அறி முகப் படுத்தினார். 1953-இல அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம் தி.மு.க. வின் பார்ப்பனர் எதிர்ப்பு விளக்கம் வேகம்பெறத் தானாகவே வழிவகுத்தது. மேலும் ஜவஹர்லால் நேரு தி.மு. கழகத்தைக் கேலி செய்ததை எதிர்த்து இரயிலை நிறுத்தும் போராட்டத்தையும் நிகழ்த்தியது. இராஜாஜியினுடைய கல்வி மசோதா திரும்பப்பெறப் பட்டமை தி.மு.க. வின் அரசியல் வெற்றிக்கு மேலும் சுவை கூட்டியது. தி.மு.க. அடிக்கடி இந்தியை எதிர்த்துப் போராட்டம் நடத்தி, போராட்ட உணர்வை உருவாக்கி வைத்திருந்ததோடு மிகப்பெரிய எண்ணிக்கையிலான மாணவச் சமூகத்தையும் கவர்ந்து தன்வயப் படுத்திக் கொண்டிருந்தது.

12. தேர்தல்களில் போட்டியிடல்

1956-இல் திருச்சியில் கூடிய ஒரு மாநாட்டில் தி.மு.க கழகம் 1957-ஆம் ஆண்டு தேர்தல்களில் தமது கட்சி போட்டியிடுவதாக முடிவு செய்து ஒரு தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையில் திராவிடர் கழகம் எதையெதை எல்லாம் எதிர்த்து வந்ததோ அவற்றை எல்லாம் தி. மு. கழகம் ஆதரித்தது. ஆனால் தனித்தமிழ் நாடு கோரிக் கையில் மட்டும் வேறுபட்டன. தி. மு. கழகம் கூட்டாட்சி அரசியல் அமைப்பு நடவடிக்கைகளை ஒப்புக்கொண்டது; ஆனால் ஒவ்வொரு மாநிலமும் தாம் விரும்பும்போது பிரிந்து செல்லும் உரிமையுடன் விளங்க வேண்டும் எனக்கோரியது. கட்சியின் சில தீவிரவாதிகள் இதை அண்ணா தமது கொள்கையிலிருந்து சரிந்து விட்டார் என்று கருதி யிருக்கக்கூடும். ஆனால் இது அண்ணாவினுடைய அரசியல் உறுதி மிக்க முன்னறிவுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. வட இந்தியர்கள், தென்னிந்திய இயற்கை வளங்களைச் சுரண்டுவதை எதிர்த்துச் சில கண்டனங்களும் எழுந்தன. இவ்வறிக்கை, இக்கட்சி சாதி, வகுப்பு பேத மற்ற கட்சியாகச் செயல்படுகிறது என்பதைப் பறைசாற்றும் வகையில்

பல சம உரிமைக் கருத்துகளைக் கொண்டிருந்தது. சமூகத்தின் எளிய குடியிலிருந்து வந்த காமராசர் அந்தச் சமயத்தில் காங்கிரஸின் தலைவராகவும், மக்கள் செல்வாக்குடைய தலைவராகவும் விளங்கினார். அண்ணாவின் குருவான பெரியார் காமராசரை மிகவும் பாராட்டி அவரை உண்மையான தமிழர் என வாழ்த்தித் தனது தொண்டர்களான திராவிடர் கழகத்தாரிடம் காமராசருக்கு வாக்களிக்க வேண்டினார். மேலும் பெரியார் காமராசருக்கு ஆதரவாகவும், தி.மு. கழகத்திற்கு எதிராகவும் தீவிரமாகச் செயல்பட்டார்.

1957-ஆம் ஆண்டு தேர்தலில் காமராசருக்குப் பெரும் வெற்றி கிடைத்தது. காங்கிரஸ் சட்டமன்றத்தில் 133 இடங்களைக் கைப்பற்றியது. அது 45.3 விழுக்காடு வாக்குகளைப் பெற்றது. தி.மு. கழகம் 15 இடங்களைக் கைப்பற்றியது. அது 14.6 விழுக்காடு வாக்குகளைப்பெற்று முதன் முதலாகச் சென்னைச் சட்டமன்றத்தில் நுழைந்தது. ஒற்றை உறுப்பினர் தொகுதி முறையில் வாக்குகளின் விகிதாசாரத்தைக் கணக்கில் கொள்ளாது, பெரும்பான்மையை அடிப்படையாகக் கொண்டு முதலில் வருபவர் வெற்றி பெற்றவர் என்று முடிவு கூறும் தீயகொள்கைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இத்தேர்தல் முடிவுகள் இருக்கின்றன. சில அரசியல் கருத்துரைஞர்கள் இதனைக் காங்கிரஸின் பன்மடங்குப் பெருக்கம் என மதிப்பிட்டார்கள். ஒழுங்கமைப்புடைய ஒரு கட்சி அமைப்பு முறையற்ற ஒரு கட்சியை எதிர்த்து நிறைய இடங்களில் போட்டியிட்டுச் சிறுபான்மை வாக்குகளைப் பெற்று, பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறமுடியும். தி.மு. கழகம் நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு இடங்களில் வெற்றி பெற்றது. தனித்த பெருங்குழுவாகச் சென்னைச் சட்டமன்றத்தில் இருந்ததால் அதிகார பூர்வ எதிர்க்கட்சியை இது அமைத்தது. தி.மு. கழகத்தின் வலிமை மிகப்பெரிய நகரப் பகுதிகளில் வேரூன்றி இருந்தது என்பதே அது இத்தேர்தலின் மூலம் அறிந்து கொண்டதாகும். இத்தேர்தல் முடிந்தவுடன் தி.மு. கழகம் சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றியது. மேலும் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டு பல மாநகராட்சிகளையும், நகராட்சிகளையும் கைப்பற்ற வேண்டி வெற்றிக்கு வழிவகுக்கிற தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டது.

இந்தச் சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஓர் உட்பூசல் எழுந்தது. இதனால் தி.மு. கவின் நிறுவகர்களில் ஒருவரான ஈ.வெ.கி. சம்பத் தி.மு. கழகத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. தி.மு. க.வின் மூலத்திட்டமான திராவிட நாடு கோரிக்கையைத் தி.மு.க. தலைமை கைவிட்டு விட்டது என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டிய சம்பத், அடுத்த ஆண்டிலேயே காங்கிரஸில் சேர்ந்ததும், அதன் நம்பிக்கைக்குரிய தமிழ்நாட்டுத் தலைவர்களுள் ஒருவரானதும் வியப்பிற்குரியன.

13. தி. மு. க. ஆட்சி பீடமேறுதல்

அடுத்து, 1962-இல் தேர்தல் நடக்கவிருந்தது. புதிய தேர்தல் அறிக்கையில் நடைமுறைக்கு உகந்த போக்கு காணப்பட்டது. விலை வாசி உயர்வு போன்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு இதில் முதன்மை அளிக்கப்பட்டது. சொல்லிலும், செயலிலும் பார்ப்பனருக்கு எதிரான தீவிரம் குறைந்து பல வழிகளிலும் அவர்களை அரவணைத்துச் செல்லும் போக்கு மேற்கொள்ளப்பட்டது. தி. மு. க. 27.10 விழுக்காடு வாக்குகளைப் பெற்று சட்டமன்றத்தில் 50 இடங்களைப் பெற்றது. இது தென்மாநில வரலாற்றிலேயே காங்கிரஸுக்கு ஒரு பெரும் சவாலாக உருவெடுத்தது. இது நாடாளுமன்றத்திற்கு 7 உறுப்பினர்களை அனுப்பிவைத்தது. தி. மு. க. பிடித்த 50 இடங்களை வைத்துக் கொண்டே அதனுடைய வெற்றியைக் கணித்து விட முடியாது. 15 தொகுதிகளில் 1000 வாக்குகளுக்கும் குறைவான வித்தியாசத்திலேயே இது தோல்வியுற்றது. இதற்குள், தி. மு. க. தலைவர்கள் அரசியல் படிப்பினையைப்பெற்று, தேர்தல் கலையில் வல்லவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டினர். அவர்கள் பெருநகரங்கள், வடமாவட்டங்களுக்கு அப்பாலும் தமது கட்சியின் பரப்பை விரிவுபடுத்தினார்கள். தென் மாவட்டங்கள் முழுவதிலும் அவர்களுடைய கொடிகள் காணப்பட்டன; முழக்கங்கள் ஒலித்தன. இத்தேர்தலில் அண்ணா தோல்வியடைந்தது வருத்தத்திற்குரியது. ஆனாலும் அவர் உடனடியாக மாநிலங்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த 1967 பொதுத் தேர்தலில் இக்கட்சி மாபெரும் வெற்றியைப் பெற்று ஆட்சியைப் பிடித்தது. அண்ணா முதல்வரானார். "எகனாமிஸ்ட்" இதழில் எழுத்தாளர் ஒருவர் விவரித்ததுபோன்று, பெயரைக்கூட உச்சரிக்கக்கூடாது என ஒதுக்கி வைக்கப்பட்ட கறுப்பு மனிதர்கள் முதன்முறையாக ஆட்சியில் அமர்ந்தார்கள். இது தமிழக அரசியலில் ஒரு புதிய காலத்தின் தொடக் கத்தைக் குறிக்கிறது. அண்ணா, தனது கட்சிக்கு வழிகாட்டவும், அதற்கு, சிறந்த ஒழுங்கமைப்புள்ள ஓர் அரசியல் சக்தியாக வடிவம் கொடுப்பதற்கும் நீண்ட நாட்கள் வாழாவிட்டாலும் அவர் ஒன்றைச் சாதித்தார் என்பது உறுதி. அரசியலில் பார்ப்பனத்தலைமை, பெருங் கட்சி அரசியல், அரசுப்பணிகளில் பார்ப்பன ஆதிக்கம் ஆகியவை நீங்கின. சூத்திரர்களின் ஆட்சி தொடங்கியது.

14. இரு கட்சி முறை

நீதிக்கட்சி நிறுவப்பட்ட காலந்தொட்டு கடந்த ஐம்பது ஆண்டு களாக நாம் எதிர்பார்த்த சில வகையான இருகட்சிமுறை நாட்டைச் சீர்ப்படுத்தும் என்ற நம்பிக்கை இருந்தது. காங்கிரஸ் ஒரு காலத்தில் வலுப்பெற்று, பிரிந்த திராவிடக் கட்சியிடமிருந்து ஆட்சியைக் கைப் பற்றக்கூடும். ஆனால் அது பார்ப்பனர் அல்லாதாரால் உருவாக்கப்படும்; வெளிப்பார்வைக்கு எவ்வளவு அலங்காரம் கொண்டதாயினும், வெவ்

வேறு மொழி மரபுகளைப் பேசினாலும் ஒரு திராவிடக் கட்சியின் கொள்கைளைப் பெற்றிருக்க வேண்டும். நமது மதிப்பிற்குரிய தலைவர்களுள் ஒருவர் கூறியது போல் திராவிடத் தோற்றம் உள்ள ஒரு கட்சி மட்டுமே வாக்காளர்களின் ஆதரவைப் பெறமுடியும். திராவிடர்கழகம், திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு இடங்கொடுத்தது போல் திராவிட முன்னேற்றக்கழகமும் மீண்டும் இரு கட்சியாகப் பிளவு பட இடம் கொடுத்தது. எனவே மேலும் சில பிளவுகளும், சில பகுதி மறு இணைவுகளும் இருக்கக் கூடும். இது இந்திய அரசியலில் ஒரு வழக்கமான நடைமுறையாகத் தெரிகிறது. திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழக மரபின் வாரிசுகளால் காங்கிரஸ் கட்சியில் நடந்து கொண்டிருப்பவை தமிழ் நாட்டிலும் கூடத் திரும்பத்திரும்ப நடைபெறக்கூடும். ஆனால் எப்பொழுதும் தமிழ் நாட்டில் ஆளுங்கட்சி யாகவோ அல்லது எதிர்க்கட்சியாகவோ வலிமைவாய்ந்த திராவிடச் சார்புடைய ஒரு கட்சி இருந்து கொண்டிருக்கும்.

15. சூத்திரர்களின் ஆட்சி

சற்று நேரத்திக்கு முன்பு சூத்திரர் ஆட்சி பற்றி நான் குறிப்பிட்ட பொழுது கலியுகத்தில் சூத்திரர்கள் ஆட்சி புரிவர் என மகாபாரதத்திலும் ஸ்ரீமத் பாகவதத்திலும் உள்ள கணிப்பை நினைத்துக் கொண்டேன். ஆனால் அக்காலத்தில் சூத்திரர்கள் நால்வருணத்தாரில் ஒருவர். இக் காலத்திலோ சூத்திரர் என்னும் சொல் அவரவர்க்குரிய வழிபாட்டு முதன்மைக் கொள்கைகளைக் கொண்ட ஆயிரக்கணக்கான சாதிகளை உள்ளடக்கியது. எந்தச் சூத்திரர் ஆட்சி புரிவர் என்ற வினாவிற்குத் தற்பொழுது விடைகாண வேண்டும். நான் முன்பே பொதுவாகக் குறிப்பிட்டது போல் பார்ப்பனரிடத்திலிருந்த ஆதிக்கம் மொத்த மக்கள் தொகையில் குறைந்த விழுக்காடுள்ளவர்களான பார்ப்பனர் அல்லாத உயர்சாதியினரிடம் சென்றது. பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் எல்லாச் சாதிகளுக்கிடையேயும் ஒற்றுமையினைக் கொண்டு வரவில்லை என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. முதியோர் வாக்குரிமை ஏதேனும் ஒன்றைச் சாதித்திருக்கிறதென்றால் அது சாதி உணர்வைத் தூண்டி, சாதிப் பகைமையினை ஏற்படுத்தியதில் அவர்கள் பெற்ற வெற்றியே ஆகும். இந்த மரபுரிமை முன்பே பார்ப்பனர் அல்லாத உயர்சாதியிடமிருந்து பார்ப்பனர் அல்லாத எண்ணிக்கை மிக்க பிற்பட்ட வகுப்பினரிடம் சென்றுள்ளது. எல்லா அரசியல் கட்சிகளிலும் வகுப்பு அல்லது சாதிக்குழுவின் அடிப்படையில் உட்கட்சிப் போராட்டம் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ நடந்து கொண்டிருக்கின்றது.

காமராசர், அண்ணா மற்றும் சில தலைவர்களைப் போல், தனிச் சிறப்பு வாய்ந்த குணமுடைய தலைவரைக் காணும்பொழுது வெவ்வேறு சாதியைச் சார்ந்த பெரும்பகுதியான மக்கள் அத்தலைவரை நாடிச் செல்லத் தொடங்கினர். மரபுவழி உரிமையான தலைமைப்பதவி

சூத்திரர்களில் மிகத் தாழ்ந்த வகுப்பாரிடமும், அதன் பிறகு தாழ்த்தப் பட்ட வகுப்பாரிடமும் எவ்வளவு விரைவாகச் செல்லும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அனைத்துச் சாதியினரையும் ஒருங்கிணைந்த ஓரினமாகப் பக்குவப்படுத்தி, சமப்படுத்திய ஜனநாயக சமூகத்தை உருவாக்கச் சில காலம் ஆகும். ஆனால் நவீனமாக்குதல், தொழில் மயமாக்குதல், நகரியமாக்குதல், வேகமான தகவல் தொடர்புச் சாதனங்கள், தொழிற்சங்கங்களின் விரிவாக்கம், கம்யூனிஸக் கருத்துகள் ஆகியவை சமப்படுத்துவதும், ஒற்றுமைப் படுத்துவதுமான செயலுக்கு நன்மை புரிந்து வருகின்றன. ஆனாலும் நாம் இன்னும் ஒரு நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சொற்பொழிவு 3

அரசியலில் சாதியச் செல்வாக்கு

1. முன்னுரை

கடந்த இரு சொற்பொழிவுகளிலும் நான், பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தின் வளர்ச்சியையும் அதன் சமூகவிளைவுகளையும் பொதுவாக விளக்கினேன். நான் பலமுறை திரும்பத்திரும்பக் கூறியதைப்போல் பார்ப்பனர் அல்லாதார் சாதி அல்லது சமூகம் என்று தனித்து ஒரு சமூகம் இல்லை. பார்ப்பனர் அல்லாதார் என்னும் தொடர் பார்ப்பனச் சாதியைச் சாராத அனைவரையும் உள்ளடக்கியது. இத்தொடர் அரிசனங்கள், கிறித்தவர், முகமதியர் ஆகியவர்களையும் உள்ளடக்கியது. கிறித்தவர், முகமதியர் மற்றும் தாழ்த்தப்பட்ட சாதி ஆகியவை நீங்கலாக நூற்றுக்கு மேற்பட்ட பெரிய சாதிகளும், நூற்றுக்கு மேற்பட்ட சிறிய சாதிகளும் பார்ப்பனர் அல்லாதாருள் அடங்கும். சாதிப்பெயர்களைப் பதிவு செய்வதற்கு இறுதியாக அமைக்கப்பட்ட மக்கள் தொகைக்கணக் கெடுப்பு அறிக்கை கூட அனைத்துச் சாதியினரையும் கணக்கீடு செய்ய வில்லை. ஆனால் அரசியல் காரணங்களுக்காகச் சில பெரும் சாதிகளைக் கூர்ந்து நோக்குதல் இன்றியமையாதது. இங்கு நமது ஆய்வுக்குத் தாழ்த்தப்பட்ட சாதிகள் அனைத்தும் ஒரு குழுவாக எடுத்துக் கொள்ளப் படுகின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்பின் பல்வேறு சாதிகளுக்கிடையே உயர்வு தாழ்வு இருந்தபோதிலும் அவற்றுள் இரு சாதிகள் மட்டுமே மிகுந்த எண்ணிக்கையையும், முக்கியத்துவத்தையும் கொண்டுள்ளன. இச்சொற்பொழிவின் இறுதியில் அரிசனங்களை அழுத்தப்பிடிப்புள்ள சக்தி எனக் கொள்ளாமல் பொதுவாக ஆய்வு செய்யப்படும்.

2. பெரிய, சிறிய சாதிகளின் பங்கீடு

தமிழ்நாட்டுச் சாதி நிலப்படத்தின் வாயிலாக உழவுத் தொழில் சார்ந்த பெரும் சாதிப் பிரிவுகளுக்கிடையே ஒரு தொடர்பு இருந்ததை அறிகிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் அரிசனங்கள் 15 விழுக்காடு முதல் 22 விழுக்காடு வரை உள்ளனர். அதாவது சராசரியாக இவர்கள் 18 விழுக்காடு உள்ளனர். இவர்கள் பெரும்பாலும் உழவுத்தொழிலாளர் களாக இருக்கிறார்கள். விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இவர் களுடைய நிலைமை, அடிமைகளை விடவும் — கொத்தடிமைகளை விடவும்—மோசமாக இருந்தது. இவர்களையடுத்து விவசாயத்தை முறையோடு மேற்கொள்ளும் வகுப்பினரான வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் வாழும் வன்னியகுல க்ஷத்திரியர், அரிசனங்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கின்றனர். திருச்சி, தஞ்சை மாவட்டங்களில் சில வட்டங்களில் இவர்கள் வாழ்கின்றனர். மாநிலத்தின் பிறபகுதிகளில் இவர்கள் குறைந்த அளவில் பரவியுள்ளனர். தென்மாவட்டங்களான மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் கள்ளர், மறவர் முதலானோர் இதே நிலையில் இடம் பெற்றுள்ளனர். வன்னியர், மறவர் முதலானோரில் சிறு பகுதியினர் குறைந்த நிலவுடைமையாள ராகவும், குத்தகைப் பயிராளராகவும் இருக்கின்றனர். ஆனால் பெரும் பான்மை மக்கள் அரிசனங்களில் மேல் மட்டத்தினரைப்போல உழவுத் தொழிலைச் செய்கின்றனர்.

அடுத்த பெரும்பான்மைச்சாதி கொங்கு வேளாளர் சாதியாகும். இச்சாதியினர் நிலவுடைமையாளர்களாகவும், பயிராளர்களாகவும் சேலம் கோயம்புத்தூர் மாவட்டங்களிலும், மதுரை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இருக்கின்றனர். இவ்வகுப்பினருள் ஒரு சிலர் மட்டுமே உழவுத் தொழிலாளர்களாக விளங்குகின்றனர். அடுத்து, இவை தவிர விவசாயத்திலிருந்து முற்றிலும் விடுபடாத மூன்று முக்கிய சாதியினர் உள்ளனர். அவர்கள் இடையர் அல்லது யாதவர், நெசவுச் சாதியைச் சேர்ந்த கைக்கோளர், மற்றும் நாடார் என அழைக்கப்பட்ட சாணார்கள் ஆவர். மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி வெள்ளாளர்கள் எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். ஆனால் அவர்கள் அனைவரும் கார்காத்தார் அல்லது சைவ வேளாளர் மற்றும் முதலியார்கள் அல்லர். கொங்கு வேளாளரின் எண்ணிக்கை தனியாகக் கணக்கிட முடியாதது. அவர்களது இப்போதைய மக்கள் தொகை 25 முதல் 30 இலட்சம் வரை என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஏறத்தாழ நூறு உட்சாதி பிரிவுகள் உண்டு. வீரக் கொடி வெள்ளாளர் என அழைக்கப்படும் கற்பனைச் சாதியும் இதில் அடங்கும். அவையெல்லாம் வெள்ளாளர் என்னும் சாதியின் கீழ்த்தொகுக்கப்பட்டுள்ளன.

3. மரபுவழி உயர்சாதிகள்

வழி வழியாக நிலவுடைமை என்பது பெரும்பாலும் பார்ப்பனர், வெள்ளாளர் சாதியில் மேம்பட்ட பிரிவினரிடமும், நாயுடு, மற்றும் ரெட்டியார் பிரிவினரிடமும் இருந்து வந்தது. கல்வியால் ஏற்பட்ட தாக்குரவு காரணமாகவும், அரசுப்பணிகள், உயர்தொழில்கள் காரணமாகவும், ஜமீன்தார் ஒழிப்பு, குத்தகைச் சட்டம் ஆகியவற்றின் காரணமாகவும் பார்ப்பனர்களின் நிலவுடைமை வீழ்ந்தது. ஆனால் பிற சாதியினர் தங்களின் முதன்மை இடத்தை இப்பொழுதும் வகித்து வருகின்றனர். இச்சாதியினரின் கல்வியறிவு சராசரி கல்வியறிவைக் காட்டிலும் மிக்கிருந்தது. பார்ப்பனர் அல்லாதார் அல்லது திராவிட இயக்கத்தின் தொடக்க காலங்களில் பார்ப்பனர்களைப் பின்னுக்குத் தள்ளி, பார்ப்பனர் அல்லாத இந்துமத உயர்சாதியினர் அந்த இடத்தைப் பெரும்பாலும் கைப்பற்றி நன்மையடைந்தனர். மேலும் இவர்களுடைய தேவைக்கேற்ப முயற்சியின்றியே செல்வாக்கைச் செலுத்தும் ஆதிக்கச் சாதியினராய் இருந்தனர்.

இயல்பாகவே இந்நிலை பிற பார்ப்பனர் அல்லாத குறிப்பாக, பெரும் எண்ணிக்கையிலான சாதியினரால் பணிந்து ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உண்மையில் சாதிப் பாகுபாட்டில், தங்களின் தாழ்ந்த சடங்கு நிலைகளுக்கு எதிரான எதிர்ப்புணர்வு 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது. இவ்வெதிர்ப்புணர்வே பல்வேறு விளைவுகளுக்கு வழிகோலியது.

4. சமஸ்கிருதமயமாக்கல்

சமூகவியலாரால் தற்பொழுது சமஸ்கிருதப்படுத்தல் என அழைக்கப் படும் செயலே பெரும்பான்மைச் சாதியினரால் முதற்படியாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இவர்கள் பார்ப்பனரைத் தழுவி க்ஷத்திரியர் அல்லது வைசியர் என்னும் பட்டங்களைத் தமது பழைய சாதிப் பெயர்களில் வைத்துக்கொண்டனர். நாடார்கள் தொடக்க காலத்தில் இரு பிறவி யாளர்களின் சடங்குகளையும், அடையாளங்களையும் தழுவியபோது பார்ப்பனர்களால் அளிக்கப்பட்ட சாதிப்பெயரால் வெறுப்பும், ஒற்றுமை யின்மையும் ஏற்படும் என அறிந்து கொண்டனர். அடுத்தபடி, சிறப்பு வாய்ந்தவர்கள் க்ஷத்திரியரும், வைசியரும் ஆவர். பார்ப்பனர்களின் விருந்துமுறை, வழிபாட்டு முறை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ புலால் உண்ணாதவராக மாறுதல் சமஸ்கிருதமயமாக்கலின் பிற அம்சங்களாகும்.

5. வன்னியகுல க்ஷத்திரியர்கள்

பள்ளி அல்லது படையாட்சி என எல்லோருக்கும் அறிமுகமான வர்கள் 19-ஆம் நூற்றாண்டின் இறுதி இருபது ஆண்டுகளில் வன்னிய குல க்ஷத்திரியர் என்ற சாதிப்பெயரை ஏற்றுக்கொண்டிருந்தனர். இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் பல சமூகச் சீர்த்திருத்தங்கள் தோன்றிய அதே காலத்திலேயே வன்னிய குல க்ஷத்திரியர் மகா சங்கம் நிறுவப்பட்டது. ஆனால், இவர்கள் பார்ப்பனர்களுக்கு அடுத்த க்ஷத்திரியர் என்னும் உயர் நிலையைப் பெரிதும் பொருட்படுத்தியதாகத் தோன்றவில்லை. இதனை இவர்களுடைய தலைவர்களே ஒப்புக் கொண்டனர். இவர்கள் சாதி இந்துக்களிலேயே பெரும் எண்ணிக்கை கொண்ட தனித்த சாதியாக இருந்தபோதிலும், தங்களுடைய பகுதியில் உள்ள சிறுபான்மைச் சாதியினரைத் தங்களது எண்ணிக்கை வலிமையை வைத்துக்கொண்டு அதிகாரம் செலுத்திய போதிலும் ஆதிக்கச் சாதி என்னும் நிலைக்கு வர இவர்களால் இயலவில்லை. இச் சாதியினரில் சிலர் பெரும்பண்ணையாளராகவும், வியாபாரிகளாகவும், பணக்காரர்களாகவும் இருந்தாலும், குறைந்த அளவான கல்விச் சாதனையும், கணிசமான மேட்டுக்குடியினர் இல்லாமையும் இதற்கு ஒரு காரணம் ஆகும். ஆதிக்கச் சாதியாக வளர முடியவில்லை என்ற பெரும் ஏமாற்றத்தைத்தொடர்ந்து, தேர்தல் வெற்றி தமக்கு ஆதிக்கச் சாதி என்ற நிலையையும், அரசியலிலும், நிர்வாகத்திலும் உயர்நிலையையும் தரும் என்று நம்பி இச்சாதி தன்னை அரசியலில் ஈடுபடுத்திக்கொண்டது.

6. உழைப்பாளர் கட்சி

கடலூரில் ஒரு நல்ல நடுத்தரவகுப்புக் குடும்பத்திலிருந்து ஓர் இளைஞர் நாற்பதுகளின் பிற்பகுதியில் உழைப்பாளர் கட்சியை நிறுவினார். குறிப்பாக, தென்னார்க்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களில் வன்னியர்களை ஒன்று திரட்டினார். ஓரளவு அரசியல் முன் அனுபவம் உள்ள ஒரு வழக்குரைஞர் வட ஆர்க்காட்டிலும் அதன் அருகில் உள்ள பகுதிகளிலும் உழைப்பாளர் பொதுநலக்கட்சி என்னும் பெயரில் மேற்சொன்னது போன்ற ஒரு கட்சியை உருவாக்கும் பணியைச் செய்தார். இந்த இரு கட்சிகளின் தோற்றம் இந்தச் சாதியை அரசியலில் பெரும் வலிமை செலுத்தும் குழூவாக மாற்றியமைத்தது. இவ்வளவு மக்கள் தொகை மிக்கிருந்தும் தொடக்க காலத்தில் இருந்த நீதிக்கட்சி அல்லது பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்திலோ பின்னர் எழுந்த திராவிடர் கழக இயக்கத்திலோ மிகப் பலர் சேராதது குறிப்பிடத்தக்கது. இது தனது தனித்தன்மையை நிலை நிறுத்தி வந்தது. மேலும் பிற்பட்ட சாதியில் தலைமையிடம் வகிக்கக்கூடிய பெருமையைக் கொண்டிருந்தது. இந்த இரு கட்சிகளும் சேர்ந்து அதிக முயற்சியோ பொருட்செலவோ இன்றி 1952-ஆம் ஆண்டு சென்னைச் சட்டமன்ற முதல் தேர்தலில் போட்டியிட்டு 24 இடங்களைப்பெற்றன. அத்துடன் நாடாளுமன்றத்திலும் சில இடங்களைப் பெற்றன. இக்கட்சியின் தலைமையில் ஒற்றுமையின்மை காணப்பட்டதால், கட்சியினர் இரு பிரிவாகப் பிரிந்து செயல்பட்டனர். இந்த இரு பிரிவில் ஒரு பிரிவைச் சேர்ந்த தலைவரையும் அவரோடு இருந்த ஆறு சட்டமன்ற உறுப்பினர்களையும் ராஜாஜி தம்மோடு சேர்த்துக்கொண்டு மந்திரி சபையை அமைத்தார். அவர் நினைத்தபடியே பொதுநலக்கட்சி கலைந்தது. தமிழ்நாட்டில் கட்சி மாற்றம் நிகழ்ந்ததற்கு இதுவே முதல் சான்றாகும். இக்கட்சி மாற்றத்திற்குக் காங்கிரஸ் துணை போயிற்று. சில ஆண்டுகளுக்குப் பிறகு ராஜாஜி உழைப்பாளர் பொது நலக்கட்சிக்குச் செய்ததையே காமராசர் உழைப்பாளர் கட்சிக்கும் செய்து காங்கிரஸில் இணைத்தார். 1963-இல் மீண்டும் புதுப்பிக்கப்படும் வரை உழைப்பாளர் கட்சி சட்டமன்றக் கட்சியாக இருக்க இயலாமற் போயிற்று. இக்கட்சியைச் சார்ந்த சாதியினர் சாதி அடிப்படையிலான கட்சியிலோ அதன் தலைமையிலோ நம்பிக்கை இழந்துவிட்டதால் இக்கட்சி எந்த ஒரு தேர்தல் வெற்றியையும் சந்திக்கவில்லை. இந்தப் பிரிவினர் காங்கிரஸோடு இணைந்த போதும் அச்சாதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அச்சாதியினரின் முன்னேற்றத்தை உயர்த்தவும், குறிப்பாக முக்கியமான இடங்களில் பணிகளையும், கௌரவப் பதவிகளையும் பெறவேண்டித் தமக்குள் இணைந்து ஒரு செல்வாக்குடைய குழூவாக அதிகாரபூர்வமன்றி இயங்கினர். வன்னியச் சாதியினர் ஒரு கட்சியாகவோ அதிகாரபூர்மற்ற செல்வாக்குக் குழுவாகவோ இயங்கியமை எல்லா வட்டார அரசியல் கட்சிகளிலும் முற்பட்ட சாதியினரின் இடத்தைப் பிற்பட்ட சாதியினர் மெல்ல மெல்லப் பிடித்தமையைத் தெளிவாகக் காட்டுகிறது. அரசுப்பணிகளில் பிற்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்துவம் பெறு

வதிலும், தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அரசியல் கட்சியிலும் போதுமான அளவு இச்சாதியைச் சேர்ந்தவர்கள் வேட்பாளர் களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதிலும் இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் நல்ல முடிவுகளைத் தந்தன. தமிழ்நாடு சட்ட மன்றத்தின் ஒவ்வொரு கட்சியிலும் வன்னியர்கள் இடம்பெற்றுள்ளனர். இச்சாதியைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்கள் வழிவழியாகச் சட்ட மன்றத்தில் இருக்கின்றனர். மேலும் இச்சாதியைச் சேர்ந்தவர்கள் மற்ற கட்சிகளிலும் தீவிர ஈடுபாட்டுடன் இருக்கின்றனர். ஒரு சிறப்பு வாய்ந்த தலைமையின் கீழ் இவர்கள் தற்போது இருக்கின்ற கட்சிகளில் ஏதாவது ஒன்றினுடைய அமைப்பைக் கைப்பற்றி அதில் தலைமை வகிக்கக்கூடும்.

7. நாடார்கள்

இந்நூற்றாண்டின் தொடக்க காலத்தில் அழைக்கப்பட்டு வந்த 'சாணான்' என்கிற சாதியினர் சமூகச் சடங்குகளில் கீழ் மட்டத்தினர் என்று கருதுவதையும் கடந்து திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங் களின் சில பகுதிகளில் தீண்டத்தகாதவர்கள் எனவும் கருதப்பட்டனர். எனவே இந்நிலையைமாற்றி உயர்த்தவேண்டும் என இச்சாதியின் தலை வர்கள் உறுதி பூண்டனர். நான் முன்பே தெரிவித்தது போல இவர்கள் தங்களைச் சமஸ்கிருதமயமாக்கத்திற்கு உட்படுத்திக்கொண்டு தங்களை ஒருவகைப் பார்ப்பனர் என்று அழைத்துக்கொண்டது தோல்விக்குரிய தாகியதோடு அது இவர்களைக் கேலிக்குரியவர்களாகவும் ஆக்கியது. இவர்கள் தங்களைப் பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களாக ஆக்கிக் கொள்ள முயன்றனர். இச்சாதியினர் முதலில் போக்குவரத்துத் தொழிலும், வெல்ல வியாபாரமும் செய்யத் தொடங்கி, பிறகு தாளிதப் பொருள், தானியங்கள், விறகுக்கட்டைகள் போன்றவற்றை மொத்த மாகவும், சில்லரையாகவும் விற்பவர்களாகப் பரவினர். இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளில் இவர்கள் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங் களிலும், பின்னர் மாநிலத்தின் அனைத்து நகர்ப் பகுதிகளிலும் மதிப்பிற் குரிய வாணிகம் மற்றும் தொழிற் சமூகமாகக் கருததும் நிலைக்கு உயர் தனர். இவர்கள் தமது இளைய தலைமுறையினரின் கல்வியை மேம் படுத்த ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொண்டனர். மேலும் இவர்களது சங்கம் தமக்குச் சொந்தமாகப் பள்ளிகளையும், கல்லூரி களையும் நிறுவ முயற்சி எடுத்தது. இம்முயற்சிகளில் தொடக்க காலத்தில் பெருமளவில் கிறித்தவமதத்தைத் தழுவிய தமது மக்களை இவர்கள் எடுத்துக்காட்டாகக் கொண்டதோடு அவர்களுடைய உதவி யையும் பெற்றனர். இச்சாதியினரின் சமூக உணர்வு, பிற்பட்டோரின் பட்டியிலிருந்து தமது சாதிப்பெயரை நீக்கி விடவேண்டும் என்னும் அளவிற்கு இவர்களைக்கொண்டு சென்றது. பிற்காலத்தில் இவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து கொண்டதுடன் இடஒதுக்கீடு உரிமையைக் கோரியும் விண்ணப்பித்தனர். கணிசமான அளவில் நல்ல வளமான வணிகக் குழுவாக இச்சாதி வளர்ச்சி பெற்றது. இது உயர்ந்த வணிகச் சமூகமாகிய செட்டியார்களுடன் எவ்வகையிலும் ஒப்பிடக்கூடியதன்று.

காமராசரைப் போன்ற ஒரு சிறந்த தலைவரை இச்சமூகம் உருவாக்கியது அதன் நற்பேறாகும். வன்னிய குல க்ஷத்திரிய வகுப்பைப் போன்று இச்சாதி அரசியல் உணர்வுடையதன்று எனினும் இதுவும் அரசியலில் செல்வாக்குடையதாக இருக்க முயற்சி செய்தது. எனினும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தென்மாவட்டங்களில் இச்சாதியினரின் ஆதரவைப் பெற முயன்றது. ஒவ்வொரு தேர்தலிலும் மாநிலச் சட்டமன்றத்திற்கும் நாடாளமன்றத்திற்கும் நாடார்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அவர்கள், சாதி நன்மைக்கு ஒன்றுபட்ட சக்தியாக விளங்கினர். இவர்களுடைய முதன்மை விருப்பம் காங்கிரஸாக இருந்த போதிலும், இவர்கள் எந்த அரசியல் கட்சியினருக்கும் முன்னுரிமை அளிக்கவில்லை. எல்லா அரசியல் கட்சித்தலைவர்களும் நாடார்களை அதிகாரமுள்ள பதவிகளில் அமர்த்த முயற்சி செய்கின்றனர். இச்சாதியினருக்கு ஒரு கட்சியைஉருவாக்கும் அல்லது எதையும் ஆதிக்கம் செய்யும் அரசியல் ஆர்வம் இல்லை. ஆனால், இச்சாதி, தமிழகத்தின் வேறு எந்தச் சாதியும் இதற்கு இணையாகக் கூற முடியாதபடி ஒன்றுபட்ட வெற்றிகரமான ஒரு குழுமுயற்சி பெற்றிருப்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. கேரளாவில் உள்ள ஈழவர்களோடு மட்டுமே இதனை ஒப்பிடமுடியும்.

பெரும்பாலும் வணிக வகுப்பிலிருந்து வந்த நாடார்களின் தலைமை, அரசியல் நிலைமை எப்படியிருந்த போதிலும் அவ்வப்போது நிலவும் அரசாங்கத்துடன் நல்ல உறவை வைத்துக்கொண்டிருப்பதில் நம்பிக்கை கொண்டிருந்தது. இவர்களது பொதுவான மனப்பான்மை எக்கட்சியையும் சாராமை ஆகும். இவர்கள் எந்த ஒரு பெரும் சாதியினருடனும் கூட்டு சேர்ந்து ஒரு பெரும்பான்மைத் தொகுதியை உருவாக்கவேண்டும் என்று முயற்சிக்கவில்லை, தென்மாவட்டங்களில் வாழ்ந்த சக்தி வாய்ந்த மறவர் சாதியினரோடு இவர்களுக்கு இருந்த பகைமையும், நம்பிக்கையின்மையும் அவர்களோடு ஏதோ ஒரு வகையில் கூட்டு வைத்துக்கொள்வதற்குத் தடையாக அமைந்தன. வன்னியர்கள், எண்ணிக்கையில் மிகுந்தும் சிறந்த அரசியல் உணர்வும் போதுமான தேர்தல் வெற்றிகளும் கொண்டிருந்த போதிலும், அவர்களுடைய வெற்றி தமிழக அரசியலில் செல்வாக்குக் குழுவாக விளங்கிய கள்ளர், மறவர் அல்லது கட்சி சாராத நாடார் சாதியினரின் வெற்றியோடு ஒப்பிட முடியாதது. அரசியல், வன்னியர்களிடத்துச் சாதி உணர்வை வலுப் படுத்தியது. ஆனால் நாடார்களிடம் அத்தகைய தாக்கம் இன்றி, சாதி உணர்வு நன்றாக ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட்டிருந்தது.

8. கள்ளர்கள், மறவர்கள்

தமிழக அரசியலில், மற்றுமொரு பெருந்தொகுதியினராகிய இச்சாதியினரின் தாக்கம் சில ஆய்வுகளுக்குரியது. திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களின் மறவர் சாதியும், இதனுடைய உடன்பிறப்புச் சாதியான கள்ளர் சாதியும் சேர்ந்து இரண்டாவது பெரிய தனிச் சமூகமாகும்.

இதனுடைய சார்புச்சாதியாகிய அகமுடையாரையும் ஒன்றாக இக்கள்ளர் மறவர் சாதியினரோடு சேர்த்துக் காணும்போது அது முக்குலத்தோர்-முக்குல மரபினர்-என்றழைக்கப்படும் மிகப்பெரிய பிரிவாகும். கள்ளர்களும் மறவர்களும் அகமுடையாரோடு இணைந்து கொள்ள விரும்பினாலும், அகமுடையார்கள் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தினர் இதற்கு எவ்வித ஆர்வமும் காட்டவில்லை என்பது தமிழ்நாடு பிற்பட்டோர் வகுப்புக் குழுவின் எண்ணமாக இருந்தது. அகமுடையாரின் கல்வியறிவின் விழுக்காடு எப்பொழுதும் அதிகமானதாக இருந்தது; மேலும் மரபு வழியாக அவர்கள் அரசுப்பணிச் சாதியினராகவே இருந்தனர். அவர்களுள் விவசாயத் தொழிலாளர்களின் விகிதாசாரம் குறைவாக இருக்கிறது. சில நேரங்களில் தம்மை அகமுடையார்களின் ஒரு பிரிவினர் என்றழைத்துக் கொள்ளும் துளுவ வேளாளர்களோடு இவர்கள் தொடர்பு கொள்ள விரும்பினர். அண்மைக்காலம்வரை தென்மாவட்டங்களில் கள்ளர், மறவர் சாதியில் பல ஜமீன்தார்களும், இளவரசுக்கொத்த செல்வமுடையோரும் செழுமை பெற்றும், பல பெருஞ்செல்வாக்குடைய பணிநிலைகளை வகித்தும் இருந்தனர். இது இச்சாதியினர் பெற்றநன்மையாகும். இராமநாதபுரத்தின் அரசராக ஒரு மறவரும், புதுக்கோட்டையின் அரசராக ஒரு கள்ளரும் இருந்தனர். இப்படிப்பட்ட பிரபுக்கள் மரபுவழி வந்த முத்துராமலிங்கத்தேவர், மூக்கையாதேவர் போன்ற சில தலைவர்களை அண்மைக் காலங்களில் இச்சாதியினர் உருவாக்கினர். மறவர்களிடம் பார்வடுபிளாக் கட்சிக்கு ஆதரவான போக்கு இருந்தது. இப்பொழுதோ கள்ளர்களும், மறவர்களும் எல்லா அரசியல் கட்சிகளிலும் இடம் பெற்றுள்ளனர்.

மறவர்கள் திருநெல்வேலி மாவட்ட மக்கள்தொகையில் 13 விழுக்காடாகவும் இராமநாதபுரம் மாவட்ட மக்கள் தொகையில் ஏறத்தாழ 9.5 விழுக்காடாகவும் உள்ளனர். மதுரை, தஞ்சை மாவட்ட மக்கள் தொகையில் கள்ளர்கள் முறையே 9 விழுக்காடும் 10 விழுக்காடும் உள்ளனர். கள்ளர்களையும், மறவர்களையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால் அவர்கள் மூன்று தென்மாவட்டங்களில் ஒரு சக்தியாக விளங்குகின்றனர். அவர்களுடைய மக்கள் தொகை விழுக்காட்டைவிட அதிக எண்ணிக்கையிலான சட்டமன்ற உறுப்பினர்களாக மாநில சட்டமன்றத்திற்கு அவர்களால் வரமுடிகிறது. வீரமரபு, சாதி ஒற்றுமை, தக்க அரசியல் தலைமை இந்த மூன்றின் காரணமாக இவர்களுக்கு ஒரு பெரும் வலிமை ஏற்பட்டது. இச்சாதியினருள் பெரும்பான்மையான மக்கள் ஏழை உழவுத் தொழிலாளர்களாகவும், குத்தகைப் பயிராளர்களாகவும் இருந்த போதிலும் இவர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கின்றனர். தங்களைப் பெரிதும் அரசியலில் ஈடுபடுத்திக்கொள்வதோடு, இவர்கள் வெற்றியீட்டும் பெரிய பதவி மீது பார்வையைச் செலுத்துகின்றனர். இக்கள்ளர், மறவர் சாதியினர் வட மாவட்டங்களில் வன்னியர்களுடன் கூட்டு வைத்துக்கொண்டால் இவர்களால் சக்திவாய்ந்த ஒரு சாதிக் கூட்டை ஏற்படுத்த முடியும். ஆனால் அத்தகைய கூட்டுறவுக்கான வாய்ப்புகள் அருகிக் காணப்படுகின்றன. அரசியல் ரீதியாக இவர்களை ஒரு சக்தியாகக் கணக்கில் கொள்ள வேண்டியுள்ளது. தென் மாவட்டங்களைப் பொறுத்த அளவில் பல துறையில் நாடார்களுடைய சாதனைகளை விஞ்சுகிற வகையில் தங்களுடைய சொல்லே இறுதிச் சொல்லாக இருக்குமளவிற்கு இவர்கள் சக்தி படைத்தவர்கள்,

9. எண்ணிக்கை மட்டும் உறுதி செய்யக்கூடிய கூறு அன்று—யாதவர், கம்மாளர் எடுத்துக்காட்டு

வன்னியர் குலக்ஷத்திரியர், நாடார், கள்ளர், மறவர் ஆகிய மூன்று பெரும்பான்மைச் சாதியினரின் போக்குகள் பற்றி விளக்கினேன். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நெருக்கம் மிகுந்த சில பகுதிகளில் இவர் களுடைய வலிமை அம்மக்கள் தொகையைச் சார்ந்திருக்கிறது. இது இவர்களுக்குக் குறிப்பிடத்தக்க அரசியல் வலிமையைத் தருகிறது. நாடார், மறவர், கள்ளர்களை விட அதிக மக்கள் தொகையைக் கொண்ட ஒரு பெரும்பான்மைச்சாதியாக இடையர் அல்லது யாதவர் சாதி உள்ளது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனாலும் அவர்கள் எல்லா மாவட்டங்களிலும் சமமான அளவில் கணிசமாகப் பரவியிருக் கின்றனர். எனினும், ஒரு சட்டமன்றத் தொகுதியில் கூட முடிவு செய்யும் குரலாக அவர்களுடைய குரல் அமையவில்லை. சாதியை மட்டுமே கருத்திற்கொண்டு எந்த ஒரு தொகுதியிலும் அரசியல் கட்சிகள் இச்சாதியினரைத் தேர்தலில் நிறுத்துவதில்லை. இவர்களால் எந்த ஒரு சட்டசபைக்கும் 4 அல்லது 5 உறுப்பினர்களுக்கு மேல் அனுப்ப இயலவில்லை. மேலும் பிற பெரும் சாதிகளைப்போல இவர்கள் ஒருங் கிணைந்து அரசியலில் செல்வாக்கு மிக்க குழுவாக விளங்கவேண்டும் என்று விரும்பமுடியாது.

சில பகுதிகளில், மக்கள்தொகை நெருக்கமற்ற மற்ற சாதிகளின் நிலைமை இப்பொழுதும் மோசமாக உள்ளது. கம்மாளர் சாதியினர் அல்லது எண்ணெய் வாணிக (வாணியர்)ச்சாதியினர் எல்லா மாவட்டங் களிலும் மிகக்குறைந்த அளவில் பரவியுள்ளதால் இவர்களால் சட்ட மன்றத்திற்கு ஒரு உறுப்பினரைக் கூட அனுப்பிவைக்க இயலவில்லை; இச்சாதியைப் போன்றே நெசவாளர் சாதியும் உள்ளது. போதுமான மக்கள் தொகை விகிதாசாரம் இல்லாதபோதிலும், எண்ணிக்கையில் பெரிய சாதிகள் அதிகமான சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்பி வைக்கும் ஆற்றல் கொண்டிருக்கின்றன. இப்போதுள்ள தேர்தல் முறையில் செருக்கமின்றிப் பரவியுள்ள சாதியினர்க்கு வாய்ப்புகள் இல்லை. ஆனால் ஆதிக்கச்சாதிகள் தங்கள் பகுதியிலும், மாநில அளவிலும், தங்களது சமூக, பொருளாதார, அரசியல் செல்வாக்கின் காரணமாக எப்படியோ போதுமான அளவிற்கும் மேலான பிரதிநிதி களைப் பெறுகின்றன. இதற்கு விலக்காக 3 விழுக்காடு மக்கள் தொகையுள்ள பார்ப்பனர்கள் குறைந்தது 7 அல்லது 8 இடங்களில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் ஓரிடத்தைக் கூடப்பெறவில்லை.

அரசியலில் செல்வாக்கு மிக்க குழுவாகத் தீவிரமாகச் செயல்படுவது ஆதிக்கச்சாதியினருக்கு எளிதாயிருக்கிறது. எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் அவர்கள் அதை நடைமுறையில் செயல்படுத்தி வருகின் றனர். சட்டமன்றத்திற்கு அதிக உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க உதவுவதைத் தவிர பிறவற்றிற்கு வெறும் எண்ணிக்கை மட்டுமே

டுத்தவர்து. ஒரு சாதியின் பொருளாதார மற்றும் பிற சாதனைகளும் முக்கியமானவை. ஒரு சாதியிலிருந்து ஒன்று அல்லது இரண்டு திறம் வாய்ந்த அமைச்சர்கள் கூர்த்த மதியோடு கூடிய சாதிப்பற்றும் தம்மைச் சுற்றி வலிமையான சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தையும் வைத்திருந்தால் அச்சாதியில் ஒரு வலிமைவாய்ந்த செல்வாக்குக்குழுவின் மையக்கரு உள்ளது எனக் கூறமுடியும். அச்சாதியிலிருந்து அரசியலுக்கு வெளியே அரசுயர் அதிகாரிகளும், உயர்நீதிமன்ற நீதிபதிகளும் பிற உயர் அதிகாரிகளும் இருந்தால் அது மேலும் பயன் விளைவிப்பதாக இருக்கும்.

10. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

பொதுப்பணிகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கணக்கில் கொள்ளாமல் சாதிகளின் நிலையை ஆய்வது முழுமையாகாது. இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இம்மாநிலத்தில் வகுப்புரிமைச் சலுகைக் கொள்கை பின்பற்றப்பட்டதன் விளைவாக அதிகாரத்தில் வளர்ச்சி, பொதுமக்கள் கருத்துகளைத் தூண்டும் திறமை, பெரும்பான்மைப் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்குச் சலுகை, அரசின் ஆதரவு ஆகியன பெருமளவில் உள்ளன. காலப்போக்கில் குறிப்பிட்ட சில சாதியினரின் போராட்ட வலிமையால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக்கொள்கை மாறிவந்துள்ளது.

சென்னை மாநிலத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கை பார்ப்பனர் அல்லாதார் அல்லது திராவிட இயக்கத்திற்கு முற்பட்டது என்பது தொடக்கத்திலேயே குறிப்பிடப்படவேண்டிய ஒன்று. பிற்பட்டோர் அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பட்டியலானது 1885-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நிதியுதவித் திட்டத்தின் போதே கால்கொண்டு விட்டது. இந்தத்திட்டம் தீண்டத்தகாதவர் அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த ஏழை மாணவர்களுக்கு உதவிகள் வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் 1906, 1913-ஆம் ஆண்டுகளில் மறு ஆய்வுக்கு உட்பட்டு விரிவாக்கப்பட்டது. 1913-ஆம் ஆண்டு வரையிலும் தாழ்த்தப்பட்ட சாதியினரிலிருந்து பிற்பட்ட சாதியினரை வேறுபடுத்தி அறியும்முயற்சி மேற்கொள்ளப்பெறவில்லை. 1925-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்ட சாதிகளிலிருந்து வேறான சாதிகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டது. இந்த இரண்டு பட்டியல்களும் 1931-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக்கொண்டு மேலும் திருத்தம் செய்யப்பட்டன. பள்ளிகளில் அரைக்கட்டணச் சலுகையை முறைப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமே இந்த இரு பட்டியல்களும் தொடர்ந்து பின்பற்றப்பட்டன. விடுதலைக்குப் பிறகு தாழ்த்தப்பட்ட, பழங்குடிச் சாதியினர் ஆகியோருக்கு அரைக்கட்டணச் சலுகை முழுக்கட்டணச் சலுகையாக மாற்றப்பட்டது. அரசியல் அமைப்பில் சட்டப்படி இயற்றப்பெற்ற பட்டியலாகத் தாழ்த்தப்பட்ட சாதியினரின் பட்டியல் இருக்கிறது. மாநில அரசால் தொகுக்கப்பெற்ற பட்டியலில் தங்களையும் சேர்த்துக்

கொள்ளும்படிப்போராடுகிறசாதிகளுடையகல்வி மற்றும்சமூகபிற்படுத் தப்பட்ட தன்மையின் அடிப்படையில் பிற்பட்ட வகுப்புகளின்பட்டியல் காலத்திற்குக்காலம் திருத்தம் பெற்றது. இவ்வசதிகள்பள்ளிக்கட்டணச் சலுகைக்காகவே தொடக்கத்தில் தோற்றுவிக்கப்பட்டன. இது எப்படியி ருப்பினும் இம்மக்களின் கல்வி முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியது

மக்களுடைய சமூக விழிப்புணர்வின் காரணமாகவும், அரசியல் உணர்வின் காரணமாகவும் பிற்பட்ட வகுப்புப்பட்டியலிலிருந்த பலசாதி யினர் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு ஒத்தநிலையிலான வசதிகளைக் கோரிப் போராடினர். அவர்களுள் சில சாதியினர் தங்களைத் தாழ்த்தப் பட்ட சாதிகளின் பட்டியலில் இணைக்கக்கோரியும் வேண்டினர். 1957-ஆம் ஆண்டில் சென்னை அரசு மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்புப் பட்டியல் என்ற பட்டியலை முதன்முறையாக ஏற்றுக்கொண்டது. இதன்கண் உள்ள வகுப்புகளுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் அதிக அளவிலான கல்விச் சலுகைகளை அளிப்பதற்காக இப்பட்டியல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

11. 1921-ஆம் ஆண்டின் வகுப்புரிமை அரசாணை

அரசுப்பணிகளில் வகுப்புரிமைப் பிரதிநிதித்துவத்தின் வரலாறு கல்வித்துறைச் சலுகைகளினின்று வேறானது. எப்படியிருப்பினும், அது 1916-ஆம் ஆண்டின் பார்ப்பனர் அல்லாதார் கொள்கை விளக்க அறிக்கையை அடுத்தே தோற்றங்கொண்டது. தமிழ்நாடு பிற்பட்டோர் வகுப்புக்குழுவின் அறிக்கை கீழ்வரும் அரசுப்பணி வேலைகளின் புள்ளி விவரங்களை அளிக்கிறது: "1894-இல் இருந்து 1904-ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் மாநிலக் குடிமுறைப் பணிகளில் இருந்த 16 உயர் பணியாளர்களுள் 15 பேரும், 21 உதவிப் பொறியாளர் களில் 17 பேரும், 140 மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்களுள் 77 பேரும், 128 மாவட்ட முன்சீப்புகளில் 98 பேரும் பார்ப்பனர்களாக இருந்தனர்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக்காலப்பகுதி களில் இது குறித்து ஆழமான ஆய்வை மேற்கொண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் பட்டதாரிகளுள் 67 முதல் 71 விழுக்காடு வரையி லானவர் தனிச் சமூகமான பார்ப்பனச் சமூகத்திலிருந்து வந்தவர்கள் என்று இ. எப். இர்ஷ்விக் கூறுவது போல இது தவிர்க்க இயலாததாய் இருந்தது. 1915-ஆம் ஆண்டிலிருந்து பாரப்பனர் அல்லாதார் மேற் கொண்ட போராட்டத்தின் விளைவாக ஐந்து வேறுபட்ட குழுக்களுக்குச் சுழல் முறையிலான வேலை வாய்ப்பு என்னும் திட்டத்தின் மூலம் அரசு 1921-ஆம் ஆண்டில் வகுப்புரிமைப் பிரதிநிதித்துவ விதியை அறிமுகப் படுத்தியது. நீதிக்கட்சியின் பெருஞ்சாதனைகளுள் இது ஒன்றாகக் கருதப்பட்டது. ஐந்து குழுக்களுக்கான சுழல்முறை வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட இத்திட்டம் நாடு விடுதலை பெறும் வரை 25 ஆண்டுக்காலம் தொடர்ந்தது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் வளர்ச்சியையும், அதில் காலந் தோறும் செய்யப்பட்ட மாற்றங்களையும் விளக்குவது என்னுடைய நோக்கமன்று. கல்வியில் வகுப்புவாரிச் சலுகைகளையும், அரசுப்பணி களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தையும் குறித்துச் சுருக்கமாக நான் குறிப்பிட்டதன் காரணம் (தாழ்த்தப்பட்டவகுப்பினர் உள்ளிட்ட) பார்ப்பனர் அல்லாதாரின் அரசியல் சமூக விழிப்புணர்வுக்கிடையே யுள்ள தொடர்பை வற்புறுத்துவதற்காகவும், மாநில அரசால் வழங்கப் பட்ட கல்வி வாய்ப்புகளிலும், அரசுப்பணிகளிலும் மிகுந்த பங்கினைப் பெறவேண்டும் என்று அவர்கள் கொண்டிருந்த விருப்பத்தை வற் புறுத்துவதற்காகவுமே ஆகும். இவ்வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத் திற்கு நீதிக்கட்சி முதன்மை அளித்தது; சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிற கொள்கை எவ்வளவு மிகுதியாகப் போதிக்கப்பட்ட போதிலும் அது இந்த இயக்கத்தைத் தடைசெய்யவில்லை. மேலும் காங்கிரஸ் அரசு விடுதலைக்குப் பிறகும் இந்தக்கொள்கையை மேற் கொண்டதோடு இதனை விரிவும் படுத்தியது. திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிடமுன்னேற்றக்கழகமும்சாதி அல்லதுவகுப்பு களின் அடிப்படையிலான இப்பிரதிநிதித்துவத்தை ஆற்றலிழக்கச் செய்யும் அல்லது பின்வாங்கக் கூடிய எந்தச் செயலையும் செய்யாது என்பதைக் கூறத் தேவையில்லை. வகுப்பு என்னும் சொல் ஒரு மங்கல வழக்குச் சொல். உண்மையில் சென்னை அல்லது தமிழ் நாட்டின் முன் மாதிரி தற்பொழுது பிறமாநிலங்களில் பின்பற்றப்படுவதோடு அது மேலும் விரிவுபடுத்தப்படுகின்றது. பிற்பட்ட வகுப்பின் அல்லது சாதியின் பிரதிநிதித்துவ வளர்ச்சி தமிழ் நாட்டில் கூட முற்பட்ட சாதியினரிடமிருந்து எதிர்த்தாக்குதலை எழச்செய்திருக்கிறது. பிற்பட்ட தன்மை என்பது சிலருக்கே தொடர்ந்து நலம் விளைவிப்பதாக இப்போது நிலைமைகள் வந்துள்ளன. ஒரு சாதி ஒரு முறை பிற்பட்டோர் வகுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டால் பின்பு அதனை நீக்குவது என்பது இயலாததாகும். ‘வாக்கு வலிமை’ என்னும் கோணத்திலேயே எந்த ஒன்றையும் அரசியல் கட்சிகள் பார்க்கின்ற காரணத்தால் நிறைய சாதிகளைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க முயற்சிக்கின்றன. இத் தகைய செயல் அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது. மேலும் மேலும் பல சாதிகள் பிற்பட்டோர் வகுப்புப்பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.

பிற்பட்டோர் வகுப்புக் குழுவின் கருத்துகளுக்கு எதிராக 1971-ஆம் ஆண்டுக்குப்பிறகு அதிக மக்கள் தொகை கொண்ட பல சாதிகள் இப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு, அதாவது மக்கள் தொகையில் ஏறத்தாழ 80 விழுக் காட்டினர் (தாழ்த்தப்பட்ட சாதி, பழங்குடிச் சாதி உள்ளிட்டோர்) பிற்பட்டவர் பட்டியலில் இருக்கிறார்கள். உண்மையில், சாதிப்பெயர் களின் குறிப்பீடு, ஆட்சியாளர் பிறப்பிக்கும் ஆணைகள் இவற்றில் ஏராளமான ஓட்டைகள் உள்ளதன் காரணமாக, பார்ப்பனர் அல்லாத ஒவ்வொரு சாதியும் பிற்படுத்தப்பட்ட சாதிப்பட்டியலில் இடம்பெற முடியும். இந்த நிலை தொடர்ந்து கொண்டிருப்பதோடு ஏற்றத்தாழ்வு

களும் குறைவதற்குப்பதிலாக விரிந்து கொண்டே செல்கின்றன. மாநில அரசு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கொள்கையை அவ்வப்போது அல்லது குறைந்தது பத்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது மறு ஆய்வு செய்யாவிடில் சமூகநீதி தவறாகப் பயன்படுத்தப் படுவதோடு செயலற்ற தாகவும் ஆகிவிடும்.

12. சமமற்ற நலம் பெறுவோர்

இப்போது நடைபெறுவது விரும்பத்தகாத போக்கு. பிற்பட்ட வகுப்புகளின் பட்டியல் விரிவுபடுத்தப்படுகின்றது. மேலும் இட ஒதுக்கீட்டு விகிதாசாரமும் பெருகியுள்ளது. தற்பொழுது கல்வி நிலையங்களில் படிப்பதற்கு இடம், பணிவாய்ப்பு இவற்றில் 70 விழுக்காட்டிற்குப் பிற்பட்ட வகுப்பினர் தொகை சென்றுள்ளது. முற்பட்ட வகுப்பினர் இடஒதுக்கீட்டை எப்பொழுதும் எதிர்க்கின்றனர். இடஒதுக்கீடு, அறிவாற்றல்களில் சிறந்தவர்களின் தகுதியை ஊக்குவிக்கவில்லை என்றும், தகுதியுடையோரின் சீரிய பணிகளைச் சமூகம் இழந்துவிட வழிசெய்கிறதென்றும் இதனை எதிர்க்கின்றனர். இந்தப் போராட்டம் அனைத்து மாநிலங்களிலும் பரவி வருகின்றது. இதனின்று மாறுபட்ட நிலையில், பிற்பட்டோர் பட்டியலில் உள்ள சில வளர்ந்துள்ள அல்லது முற்போக்குச் சாதியினர் தங்களுடைய எண்ணிக்கைக்கும் அதிகமான அளவில் இட ஒதுக்கீட்டுப் பங்கினைத் தாங்களே பெறுகின்றனர் என்று உண்மையிலேயே பிற்பட்ட நிலையில் இருக்கும் வகுப்பினர் எப்பொழுதும் குற்றம் சாட்டுகின்றனர். பிற்பட்டோர் வகுப்புக்குழுவின் கருத்துப்படி தமிழ்நாட்டில் 20 அல்லது 25 இலட்சம் மொத்த மக்கள் தொகையைக் கொண்ட சில சாதியினர் அரசுப்பணிகளில் இடஒதுக்கீடு, கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு இந்த இரண்டிலும் 60 விழுக்காட்டிற்கும் மேலாகப் பெறும் நிலையிலிருக்கின்றனர். இதன் காரணமாக, பிற்பட்ட வகுப்பினருள் குறைந்த முன்னேற்றம் உள்ள சில சாதியினர் நடைமுறைக்கு ஒவ்வாத விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை வேண்டுகின்றனர்.

13. இடஒதுக்கீடு மறு ஆய்வுக்குரியது

சுற்றுப்புற, சமூக இடையூறுகள் ஓரிரு தலைமுறைகளின் உணர்வுபூர்வ உழைப்பால் அழிக்கப்பட முடியாது என்னுங்கருத்தைப் புதிய சமூகமும், புதிய சிந்தனையும் அனுமதிக்காது. தொழில்கள், தேர்வுகள், அரசுப்பணிகளில் சாதனைகள் ஆகியவற்றில் பிற்பட்ட சாதியினரின் முன்னேற்றத்திலிருந்து அவர்களிடையே அதிகமான திறமையுடையவர்கள் இருப்பதைக்காண முடிகிறது. நாடார் சமூகத்தினர் இதனைக் குறிப்பிடத்தக்க அளவில் வெளிப்படுத்திக் காட்டியுள்ளனர். இந்தத் திறமை சில போட்டிகளின் போது மேலும் செழிக்கும். எக்காலத்திலும் மாநில ஆதரவைச் சார்ந்திருக்க முடியாது என்பதைப் பிற்பட்ட வகுப்பினரின் தலைவர்கள் உணரவேண்டும். இடஒதுக்கீட்டுச்

சலுகைகளைப் பெரிதும் எதிர்நோக்கியே இன்றைய இளைஞர்கள் இருக்கின்றனர். பார்ப்பனர் அல்லாதாரும் அவர்களுள் குறிப்பாகப் பிற்பட்ட வகுப்பினர் எனப்படுவோரும் இட ஒதுக்கீட்டின் மூலம் கல்வி நிறுவனங்களில் சேருவதிலும், தாராளமான இட ஒதுக்கீட்டின் மூலம் அரசுப்பணிகளைப் பெறுவதிலும் நன்மை அடைந்துள்ளனர். இப்பொழுது இவ்விட ஒதுக்கீட்டுமுறை மாநில அரசுப்பணிகளில் மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது. மற்ற மைய அரசுப்பணிகள், அரசின் பொதுநிறுவனங்கள் அல்லது வணிக நிறுவனங்கள் ஆகியவற்றில் இம்முறை இல்லை என்பது உண்மையாகும். எப்படியிருப்பினும் இது ஜனதா அரசினால் மூன்றாண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட பிற்பட்டோர் வகுப்புக் குழுவின் ஆய்வில் உள்ளது. தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் மலைச்சாதியினருக்கும் செய்ததைப்போல் பிற்பட்ட சாதியினருக்கும் இடஒதுக்கீடு செய்வதே நியாயமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சில பிற்பட்ட சாதிகள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன; சில சாதிகள் பின்தங்கியுள்ளன. மொத்தத்தில் இந்த முன்னேற்றம், முற்பட்ட வகுப்பினருக்குச் சரிசமமாக அவர்களைக் கொண்டு வருவதற்குப் போதுமானதன்று. தவிர்க்க இயலாத நிலையில் இம்முன்னேற்றம் ஒரே சீராக இல்லை. இளைய தலைமுறையைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் இடஒதுக்கீட்டை அதிகமாக நம்பியிராமல் மிகுந்த முயற்சியில் ஈடுபடுவது இன்றியமையாதது.

14. மேல்தட்டில் உள்ளவர்களை நீக்குதல்

குறிப்பிடத்தக்க இரண்டு போக்குகள் காணப்படுகின்றன. இட ஒதுக்கீடு, நடைமுறையில் பிற்பட்ட வகுப்பின் மூன்று தலைமுறையினருக்கு-1920 முதல் 1980 வரையில் அறுபதாண்டுகள்-உதவியுள்ளது. இட ஒதுக்கீட்டின் பயன் பெரும்பாலும் பிற்பட்டோருள் உயர்ந்த சில சாதியினருக்கும், ஒவ்வொரு சாதியிலும் வளர்ந்து கொண்டிருக்கிற உயர்மட்டத்தினருக்குமே சென்றுள்ளது. வடிகட்டும் செயல்முறை முழுமையானதாகவோ சீரானதாகவோ இல்லை. இது வியப்பிற்குரியதன்று; மேலும் இது ஓரளவிற்குத் தவிர்க்க முடியாதது. இந்த இரண்டு போக்குகளும் கட்டுப்படுத்தப்படுமாயின் சமுதாயத்தின் பரந்த நலனுக்கும், பிற்பட்ட சாதியினரின் நலனுக்கும் அது பயனுடையதாய் அமையும். இந்த வழியில் ஆட்சியாளர்களிடையே இதைப்பற்றிய சிந்தனை இருந்து வருகின்றது. ஆனால், தொடர்ந்து பயன்சுவைப்போரின் எதிர்ப்பு மிகவும் வலிவானதாக இருப்பதால், தேவையான களையெடுப்பைச் செய்ய இயலவில்லை. ஆனால், இன்றோ அல்லது நாளையோ இவ்விருவகையான மேல்மட்டத்தினரை நீக்குதல் தவிர்க்க முடியாததாக வந்துசேரும். இல்லாவிடில், நாம் சாதி அமைப்புக்குள்ளேயே ஒரு வகுப்புமுறைமையை ஊக்குவிப்பவர்களாக ஆவோம். ஜனநாயக, சோசலிச சமூகத்தில் இது விரும்பத்தக்க போக்கு அன்று.

பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் தாழ்த்தப்பட்டோர் தவிர்த்த பிற பார்ப்பனர் அல்லாதாரின் நிலையைப் பாதித்தது. எனவே நான் இவ்விவாதத்தில் அரிசனங்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை. கல்வி நிறுவனங்கள், அரசுப்பணிகளில் இடஒதுக்கீடு, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் ஆகியன தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு இந்திய அரசியல் சட்டத்தாலேயே உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இம்மக்கள் தங்களுக்குரிய வாய்ப்பினைப் பெறத்தக்க வகையில் மைய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன. இன்றும் கூட அவர்களில் மிகவும் முன்னேறிய ஓரிரு சாதியிலிருந்து வந்த சில மேட்டுக்குடியினரே மீண்டும் நன்மை பெறுபவர்களாக இருக்கிறார்கள். பிற்பட்ட வகுப்பினரின் கீழ்நிலையிலுள்ளவர்களைக் காட்டிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சார்ந்த மேல்மட்டத்தினர் பொதுவான பொருளாதார நிலையில் மேம்பட்டவர்களாக இருக்கிறார்கள். இது தவிர்க்க இயலாத நிலையில் பல இடங்களில் அவர்களுக்குள் (பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினருக்குள்) மோதல்களுக்கு வழிவகுக்கிறது. உழவுத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ளும் நிலவுடைமை வகுப்பினரும், நிலக் குத்தகைக்காரர்களும் தாழ்த்தப்பட்டோரைத் தங்களுக்கு இணையாக மதிப்பதற்கு மிகவும் தயங்குகின்றனர். இத்தாழ்த்தப்பட்ட மக்கள் தாம் இப்பொழுது துய்த்து வரும் தனி அரசியல் சட்டப் பாதுகாப்பை நன்கு அறிந்துள்ளனர். பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்திலிருந்து தன்மானக் கருத்துகளையும் தொழிலாளர் இயக்கத்திலிருந்து எல்லா மனிதரும் அரசியல், சமூக உரிமைகளைச் சமமாகப் பெற்றவர் என்னும் கருத்தினையும் பெற்றிருப்பதால் சாதி இந்துக்களால் அவர்களுக்கு அவமரியாதை ஏற்படுவதை அவர்கள் நீண்ட நாட்களுக்குப் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். அரசியல், சமுதாயக் கட்டமைப்பு காக்கப்படவேண்டுமேயானால் மைய, மாநில அரசுகளும் இந்து சமூகமும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு உரிய இடத்தை அளித்துப் போற்ற வேண்டும்.

தியாகராயர் வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகள் :

27-4-1852	—	தியாகராயரின் தோற்றம்.
1876	—	இளங்கலைப் பட்டம் பெறுதல்.
1876	—	தாது ஆண்டு வறட்சியினால் துன்புற்ற மக்களுக்கு உணவளித்தல்.
1882	—	சென்னை மாநகராட்சிமன்ற உறுப்பினராதல்
1882-1920	—	சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகப் பணியாற்றுதல்.
16-5-1884	—	சென்னை மகாஜன சபையின்தோற்றம் 1912 வரை உறுப்பினராக இருத்தல்.
1884-1808	—	மணியக்காரார் சத்திரத்தின் சிறப்புச் செயலாளராக பணியாற்றுதல்.
1885	—	அனைத்திந்தியக் காங்கிரசுப் பேரவைத் தோற்றம்.
1885-1917	—	காங்கிரசின் உறுப்பினராகப் பணியாற்றுதல்
1887	—	சென்னையில் நடைபெற்ற மூன்றாவது காங்கிரசு மாநாட்டில் கலந்து கொண்டு ரூ. 200/- நன்கொடையும் வழங்குதல்.
1887-1924	—	பச்சையப்பர் அறக்கட்டளையின் உறுப்பினராகவும், தலைவராகவும் பணியாற்றுதல்.
26-3-1889	—	இவரது இடைவிடா முயற்சியால் அரசு விக்டோரியா தொழிற்பயிற்சிக் கூடம் நிறுவுதல்.
3-12-1897	—	தியாகராயர் தொடக்கப்பள்ளி நிறுவப் பெறுதல்.
3-12-1898	—	சென்னை ஆரியன் கிளப் தோற்றுவித்தல்.
1898	—	சென்னைப் பல்கலைக் கழக
1904	—	தியாகராயர் தொடக்கப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாதல்.
1905	—	வேல்ஸ் இளவரசர் (ஐந்தாம் ஜார்ஜ்) வருகை தியாகராயர் இளவரசரைத் தமது வளமனையில் வரவேற்றல்.
1905	—	செங்கல்வராய நாய்க்கர் தொழில் நுட்பப் பயிற்சி பள்ளி தொடங்கப்படுகிறது.
1908	—	அகில இந்திய நெசவுப் போட்டியில் பரிசுகள் பெறுதல்.
1908-1920	—	உலகப் பொதுப் பற்றாளர் கழகத்தின் துணைத் தலைவராகவும், தலைவராகவும் பணியாற்றுதல்.

1921	—	தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் - இவரது முயற்சியால் தொழிலாளர்கள் வேலைக்கு திரும்புதல்.
1921	—	கானாட் பிரபுவின் வருகை - தியாகராயர் வரவேற்பளித்தல்.
1921-1924	—	உலகப் பொதுப் பற்றாளர் கழகத்தலைவராகப் பணியாற்றுதல்.
13-1-1922	—	வேல்ஸ் இளவரசர் (எட்டாம் எட்வர்ட்) வருகை தியாகராயர் துறைமுகத்தில் வரவேற்பளித்தல்
13-1-1922	—	சட்டமன்றத்திற்குச் செல்லாதவாறு ஒத்துழையாமை இயக்கத்தினர் தியாகராயரைத்தாக்குதல், அவரது இல்லத்தையும் சேதப்படுத்தல்.
9-5-1922	—	சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான தென்னை மரங்களில் கள் இறக்குவதற்கு அனுமதிப்பதில்லை என்னும் தீர்மானம் தியாகராயரின் தலைமையில் நிறைவேற்றப் பெறுதல்
1923	—	இரண்டாவது பொதுத் தேர்தல் - நீதிக்கட்சி மீண்டும் வென்று அமைச்சரவை அமைத்தல்.
20-10-1923	—	மருத்துவ மாநாட்டில் வரவேற்புரைக்குழுத் தலைவராகப் பணியாற்றுதல்.
23-10-1923	—	மாநகராட்சி மன்ற தலைமைப் பதவியின்றும் விலகுதல்.
1923	—	பச்சையப்பர் மன்றத்தில் தியாகராயரின் உருவப் படம் திறத்தல்.
27-11-1923	—	நீதிகட்சி அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவரப் பெற்றுத் தோல்விருறுத்தல்.
1924	—	பெல்காம் பிராமணரல்லாதார் மாநாடு.
1924	—	சீனியர் தியாகராயரின் மறைவு.
13-4-1925	—	தேவாங்கர் மாநாட்டில் கலந்துக்கொண்டு கைத்தறிக் கண்காட்சியை தொடங்கி வைத்தல்.
27-4-1925	—	தமது இல்லத்தில் ஆளுநரைச் சந்தித்து கூவம் சீரமைப்புப் பற்றி உறையாடுதல்.
28-4-1925	—	சர். தியாகராயரின் மறைவு.
28-4-1925	—	தியாகராயரின் நினைவைப் போற்றுமுகமாக, உலகப் பொதுப்பற்றாளர் கழகத்தில் மது வகைகளை அனுமதிப்பதில்லை என்று தீர்மானம் நிறைவேற்றப்பெறுதல்.

✲ ✲ ✲

திரு ஏ. என். சட்டநாதன்

இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள செங்கோட்டையில் 15-5-1905-இல் பிறந்தார். திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் வரலாறு மற்றும் பொருளியல் பிரிவுகளில் பயின்று 1926-இல் எம்.ஏ. பட்டம் பெற்றார். 1928-இல் அனைத்திந்தியத் தேர்வில சுங்கம் மற்றும ஆயத்தீர்வைத் துறைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவ்விரு துறைகளிலும் பல முதன்மைப் பொறுப்புகளை வகித்து, சென்னை, கல்கத்தா, பம்பாய, தில்லி முதலிய நகாங்களில் பணியாற்றியுள்ளார். 1946 முதல் ஐக்கிய நாடுகள் அவையின்கீழ் உள்ள பல குழுக்களில் இந்தியப் பிரதிநிதியாகப் பணியாற்றியுள்ளார்.

ஓய்வு பெற்றபின் வணிக நிறுவனங்களிலும், தொழில் நிறுவனங்களிலும் இயக்குநராகவும் ஆலோசகராகவும் இருந்து வருகின்றார். இந்திய அரசாலும், தமிழக அரசாலும் அமைக்கப் பட்ட பல உயர்மட்டக் குழுக்களில் தலைவராகப் பணியாற்றி யுள்ளார். குறிப்பாக, இவர் சமூகச் சீர்திருத்தங்களிலும், பண்டைய தமிழ்ப் பண்பாடு, நாகரிகங்களிலும் ஈடுபாடு உடையவர். இப்பொருள்களில் இவர் ஆங்கிலச் செய்தித் தாள்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். சிறுவர்களுக்குப் பயன்படும் வகையில் நூல்கள் சிலவும் இவர் இயற்றியுள்ளார்.